தென்மொழி

வெல்லாத ஆரியர் வென்ற கதைஇது! வீரத் தமிழினம் வீழ்ந்த இழிவிதே!

தமிழம் திரிந்து சமற்கிரு தத்தில்
'திரமிளம்' ஆகித் 'திரவிடம்' நின்றது!
அமிழ்தாம் தமிழை அழித்துத் திராவிடம்
ஆக்கிய ஆரியத் தில்லு முல்லிது!
கமழும் மொழிப்பெயர் இனப்பெயர் அழிந்ததால்
கன்னித் தமிழும் தமிழரும் அழிந்தே
உமிழத் தக்க 'திராவிடர்' ஆயினர்!
உயிர்போய் விட்ட பிணமாய்க் கிடந்தனர்!

'திராவிடர்' எனும்சொ(ல்)லைத் தமிழர் தவிரத்
தெலுங்கரோ, கன்னட ரோ, மலை யாளரோ
பராவுதல் இல்லை; பயில்தலும் இல்லை!
பாழும் தமிழரே பயின்று வந்ததால்
திராவிடர் இருக்கத் தமிழர் அழிந்தனர்!
தமிழர் அழிந்ததால் தமிழுணர் வழிந்தது!
திராவிடர் எனும்சொல் கழகநூல் எதனினும்
தெள்ளிப் பார்க்கினும் தெரியவிய லாதே!

இல்லாத பெயரை இருப்பதாய்ச் சொல்லி
இருந்த பெயரை இழந்தனர் தமிழர்!
பொல்லாத ஆரியச் சூழ்ச்சியை அறியாப்
புழுக்கைத் தமிழரே தமிழரை அழித்தனர்!
எல்லாரும் தெலுங்கர் கன்னடர் மலையராய்
இருந்திடத் தமிழர் இல்லாது போயினர்;
வெல்லாத ஆரியர் வென்ற கதையிது!
வீரத் தமிழினம் வீழ்ந்த இழிவிதே!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 27
ஓலை : 4

விலை:
உருபா : 3-00

நமக்கு வந்த மடல்கள்.

○ : 1544: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம், இத்துடன் நான் 'நாற்காலி' இதழுக்கு அனுப்பிய மடலின் படியை இணைத்துள்ளேன்; பெற்றுக் கொள்ளவும்; தங்கள் தமிழ்ப்பணி மேலும் சிறந்தோங்க வாழ்த்துகிறேன்; நன்றி.

('நாற்காலி' இதழ்க்கு விடுத்த மடலின்படி.)

ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம், தங்களது இதழ் நாற்காலி செப்டம்பர் 15-30 மலர்: 1 இதழ்: 1 பார்த்தேன்; படித்தேன்; மகிழ்ந்தேன்; இன்றைய அரசியல் சாய்க்கடை இதழ்களுக்கிடையே தரமான, பொறுப்பான, புதுமையான முறையில் நாற்காலி தோன்றியிருப்பது கண்டு வாழ்த்துகள். வாணிகத்திற்காகப் பொய்யும், புனைசுருட்டும் எழுதி வரும் தாள் குப்பைகளுக்கிடையே ''தமிழனென்று சொல்லடா; தலைநிமிர்ந்து நில்லடா'' என்கின்ற நாமக்கல் பாவலரின் முழக்கத்தோடு தங்கள் இதழ் 'நாற்காலி' துவக்கிய முதல் இதழிலே, நம் தமிழின மீட்சிக்காகவும், தனித்தமிழ் வளர்ச்சிக்காகவும் அயராது பாடுபட்டு வருபவரும், ஒப்பாரும் மிக்காரும் இல்லாரும் ஆகிய சிறைக்கஞ்சாத தமிழரிமாவும் ஆன, 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை'' என்கிற பாவேந்தனின் இலக்கிய வரிகளுக்கு ஏற்ப சிறைச்சாலையைச் சிந்தனைக் கூடமாக மாற்றிய ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை நேர்காணல் கண்டு, தங்களது இதழில் வெளியிட்டுத் தமிழ் கூறும் நல்லுலகிற்குப் பெருந்தொண்டு ஆற்றியுள்ளீர்கள்; தங்களுடைய பணி போற்றுதற்குரியது. அவரைப் பற்றிய செய்தி போடுவதற்கே இதழ்கள் அஞ்சுகின்ற இந்த நேரத்தில், 'காகித' மலர்களுக்கிடையே கவின்மிகு மணமலராகத் தங்களது இதழ் விளங்குகிறது என்றால் அது மிகையாகாது.

சிந்தனைக் கூடத்தை(சிறைவாசத்தை)விட்டு ஏழு திங்களுக்குப் பின் வந்திருக்கும் ஐயா அவர்களிடம் நேர்காணல் பெற்று வெளியிட்டிருப்பது தங்களது மிகப் பெரும் (அசாத்திய) துணிச்சலையும், தமிழ்மொழியின் மீதிருக்கும் பற்றையும் வெளிக்காட்டுகிறது. இந்த நேர்காணல் இத்துடன் நில்லாது இனியும் தொடரவேண்டும். அவரது மொழிப்பற்று இனப்பற்றுப் பாடல்கள், கட்டுரைகள் தொடர்ந்து தாங்கள் வெளியிட வேண்டும்; ஒரு சில தனித்தமிழ்ப் பற்றாளர்களிடையே மட்டும் உலாவி வரும் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, 'தமிழ்நில'ப் பாடல்கள், கட்டுரைகள் ஐயாவின் ஒப்புதலோடு வெளியிட்டு வந்தால், தமிழ்ப் பற்றாளர்கள் மட்டுமல்லர், பொதுமக்கள் நடுவிலும் ஐயாவின் கருத்துகள் பரவ வாய்ப்பாக இருக்கும். மக்கள் நடுவில் ஓர் எழுச்சி ஏற்படும், நம்மினத்தின் நிலையும் அறிய வாய்ப்பாக இருக்கும்.

இவர் போன்ற செயற்கரிய செய்வார் பெரியார் சிலபேர் இருப்பதால்தான் முன்தோன்றிய மூத்த குடியாகிய தமிழ்க்குடி

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

'பொங்கலோ பொங்கல்' எனப் பொய்விழாக் கொண்டாடுவதா?

இங்கோ அங்கோ என்
றில்லாமல் பல நாட்டில்
ஏதி லராய்,
எழில்தமிழும் இனஉறவும்
இழந்தும் கலந்தும்
இயல்பு மாறி,

மங்காமல் மங்கி, உயிர்
மடியாமல் உழல்தமிழர்
மறுபுறத்தே
மற்றிங்கு வாழ்பவரோ
மானமும் மதிப்பும்
மடிய விட்டே,

எங்கோ தொலைத்தளம்
மொழியையும் இனத்தையும்
நாட்டினையும்
எவரெவர்க்கோ விற்றுவிட்டே
இளைத்தும் களைத்தும்
இளித்துக் கொண்டே

'பொங்கலோ பொங்கல்'எனப்
பொய்விழாக் கொண்டாடும்
புல்லியர்க்கே
புதிதாக என்சொல்வோம்?
புத்துணர்வை எவ்வாறு
புகட்டுவோமோ?

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.** (தொலைபேசி: 847829)

[சுவடி: 27 தி.பி.உ0உரு —சுறவம்— (சன-பிப் 94) (ஓலை: 4)

எந்தமிழ் இனத்திற்கு இறுதி எச்சரிக்கை!

அழுதுஅழுது உள்ளம் அரற்றி அழுது
தொழுது தொழுதுகை கூப்பிடத் தொழுது
பொன்எனத் திகழ்ந்து புலமெலாம் பரவிய
முன்வர லாற்றையும் முத்தமிழ்த் திறத்தையும்
எடுத்தெடுத் தியம்பி எழுக எழுகென
அடுத்தடுத் துரைத்தும்,எம் அருமைத் தமிழினம்,
படுத்தே கிடப்பது எனும்பாழ் உணர்வினால்
மடுத்த செவியொடும் மங்கிய அறிவொடும்
மூடாத விழியொடும் முணகிய வாயொடும்
ஆடாது அசையாது அரைஉயிர் கழன்று
சாகின்ற பிணம்போல் சாய்ந்து கிடப்பதை
நோகின்ற நெஞ்சொடும் நொடித்த உணர்வொடும்
எண்ணிப் பார்க்கிறோம்! எண்ணிப் பார்க்கிறோம்!
மண்ணில் எம்மினம் மறைகின்ற காலமும்
அதிர நடையிட்டு, அதோ அதோ மலைபோல்
எதிர வந்ததே! இருள்புடை சூழ்ந்ததே!

இனியென் செய்குவோம்? இனியென் செய்குவோம்?
தனியொரு சாக்குரல் தாழ ஒலித்தல்போல்
இறுதிக் கூக்குரல் இறுதிஎச் சரிக்கை
உறுதியாய் உரைக்கிறோம்! ஓலம் இடுகிறோம்!

ஓ!ஓ! தமிழரே! உடன்பிறந் தவர்களே!
கூவும்என் குரலொலி கோடையின் இடிபோல்
உம்செவி முட்டிவந் துறுத்த வில்லையோ?
உம்உளத் துணர்வினை உலுக்க வில்லையோ?

எந்தமிழ் இனத்திற்கு இறுதிஎச் சரிக்கை!
செந்தமிழ் இக்கால் சிறிதுசிறி தாக
அழிந்துகொண்டுள்ளதை அறிவரா, தமிழர்?
கழிந்துகொண் டுளததன் தனித் தன்மை?

எந்தமிழ் மொழியை இம்மி இம்மியாய்
இந்தியென் நாய்மொழி இழிவு செய்வதை

அழித்துக் கலைப்பதை அறிய வில்லையா?
பழித்துச் சிதைப்பதைப் பார்க்க வில்லையா?
எத்தனை முறைநாம் எதிர்ப்பது இந்தியை?
அத்தனை முறையும் அடங்கிடு வதுபோல்
காட்சி காட்டிக் கண்மறைந் திருந்தே,
ஆட்சி வடவர் படிப்படி யாக
மீண்டும் மீண்டும் மேலேறி வலிவுடன்
ஆண்ட தமிழை அழித்திடல் காண்கிறோம்!

வடவர் பிடியினில் தமிழகம் வந்ததால்
கெடட்டும் தமிழும் தமிழக மும்என
அன்னவர் சூழ்ச்சியாய் அன்றன் றைக்கும்
கன்னல் தமிழைக் கழிசடை இந்தியால்
சிற்சிறி தாகச் சீரழித் திடுவதை—
பற்பல முறைநாம் பார்த்த தில்லையா?

இன்னும்நாம் இந்தியை எதிர்த்திடல் இயலுமா?
பின்னர்ஏன் இந்தியை எதிர்ப்பதாய்ப் பிதற்றுவோம்?

இந்தியா உளவரை இந்தியும் இருக்கும்
முந்தியே கூறிய முழுவுண்மை இதுவே!
வடவர் ஆள்வது இந்தியை வைத்தே!
முடவன் கொம்புத் தேனுக்கு முனைதல்போல்
இன்னமும் தமிழை ஏற்றமுற் றுயர்த்திட
நன்னருஞ் செயல்களை நாம்நினைத் திருப்போம்!

வடவன் தமிழை வாழவும் வைக்கான்!
மடமொழி இந்தியை மறுக்கவும் மாட்டான்!
தமிழைத் தாழ்த்தினுல் தமிழரும் தாழ்வார்!
தமிழர் தாழ்ந்திடில் தமிழ்நில ஆட்சி
இந்தியான் கைகளில் இருக்கவே இருக்கும்!
அந்தத் திட்டந்தான் அவனுடைத் திட்டம்!
இந்த நிலையினில் இந்தியைத் தடுக்க
எந்தக் கொம்ப ளுலும்இய லாது!

சொந்தப் பெருமையை, நலன்களைக் காத்திட
தந்திர உத்திதான் இந்தியைத் தடுக்கும்
போராட்டம், மாநாடு, புரட்சிக்கத் தல்கள்!
பாராட்டு, மலர்மாலை, பணமும் திரட்டலாம்!
எனவே, இந்தியை எதிர்த்து விரட்டிடும்
முனைவுஏ தென்னில் தமிழ்நிலம் மீட்பதே!

தமிழ்க்கல்வி இன்னும் தழைத்திட வில்லை!
தமிழில் கற்ருல் அரசுபணி தந்திடும்

என்னும் நிலைமை இருந்தால் அன்றோ
முன்வரும் மாணவர் முத்தமிழ் கற்பார்!
இந்தி,ஆங் கிலத்திற்கு இருக்கின்ற சலுகை
முந்தித் தமிழ்க்கு முனையாத நிலை ஏன்?
தமிழ்க்கல்வி இப்படித் தாழ்ந்திடும் போதில்
தமிழர்தம் உரிமைக்கு எத்தனைத் தடைகள்!
தங்கள் உரிமையைத் தட்டிக் கேட்டிடும்
எங்கள் பேச்சுக்கும் எழுத்துக்கும் இடுசிறை!
'மிசா' 'என்-எசு-ஏ' மீளாத 'தடாச்'சிறை!
உசாவல் இல்லாமல் ஓராண்டு; ஈராண்டு!
என்ன கொடுமை! உரிமை இழப்புகள்!
இன்ன நிலையெலாம் எப்படி வந்தன?

பேசுவது ஒற்றுமை? பரப்புவது ஒருமை!
வீசுவது சட்டம்; வெஞ்சிறை; அழிப்புகள்!
அடக்கு முறைக்குமோர் அளவுஇங் கில்லையா?
வடக்கெனில் வாழ்த்து! வரவேற்பு! மாலைகள்!
தெற்கினில கொடுஞ்சிறை? அழிப்புதான் தீர்ப்பா?
எதற்கிந்த வேற்றுமை? இதுதான் குடிமையா?
ஆட்சி,அதி காரம் அவர்க்கே சொந்தமா?
மீட்சியில் லாத மிடிமை எங்கட்கா?
என்னஇஞ் ஞாயம்? என்னஇந் நேர்மை?
என்ன நடுநிலை? என்னகுடி யரசு?
குடிமகன் ஒருவன் கையூட்டு வாங்கினால்
அடிதடி! வெஞ்சிறை! அதிகாரப் பறிப்பு?
முதல்,தலை—அமைச்சர்கள் ஊழலில் மூழ்கினால்
புதுப்புதுப் பதவிகள்! அதிகாரப் புதுக்கல்!

கலைகளும், தொழில்களும் காணரி யாட்சியா?
கலை,பண் பாடெனில் இந்திய, ஆரியமா?
தொலைக்காட்சி வானொலி வடவர்க்கே சொந்தமா?
இலையெச்சில் போல்இரண் டொன்று எங்கட்கா?
மக்கள் வரியில் கால் போக்குக்கும் வரவுக்கும்!
முக்கால் பங்கு முட்டாள் தனத்திற்கு!

அப்பப்பா! எத்தனை ஆடம் பரங்கள்
செப்புக் காசுக்கும் உதவாத செய்திக்கோ
எத்தனை விழாக்கள்! எத்தனை வேடிக்கை!
பித்தளைப் பயனுக்குத் தங்கப் பிதற்றல்கள்!
கட்சிகள், மதங்கள், கடவுள், சாமிகள்,
நச்சு மனங்கட்கு—நாயனம்! மேளங்கள்!

உழவர், தொழிலாளர் ஒட்டிய வயிறுடன்
கழிசடை வாழ்க்கை காண்கையில், கொள்ளையில்

உண்டு களித்தே உலாவரும் அமைச்சர்கள்!
பெண்டு பிள்ளைக்குப் பெரும்பெரும் வளங்கள்!

ஓ!இளை ஞர்களே! ஓ!இளை ஞைகளே!
கோயில், குளங்கள், கும்பிடும், சாமிகள்,
அறநிறு வனமெனும் ஆரவா ரங்கள்,
துறவி மடங்கள், தொலையா மதங்கள்,
இன்னின்ன வகைக்கெலாம் இந்திய ஆட்சியில்
பொன்னென்ன! பொருளென்ன! பொழுதுக்கும்
விழாவென்ன!

மக்கள் என்பார்க்கு மண்ணுதான் உணவு!
தக்க திட்டங்கள் தாள்களில் உரைகளில்!
செயற்பா டெல்லாம் சிக்கல் பிக்கல்கள்!
வயல்விளைவு வான்தொழில் வருவன யாவும்
அமைச்சர் களுக்கும் அதிகாரி களுக்கும்
நமைச்சல் தீரா முதலாளி மார்க்கும்
கள்ள வாணிகர், கயமைசெய் கலைஞர்
குள்ளத் திருடர், கொள்ளையர், கொலைஞர்
ஆக இவர்க்கெலாம் அளந்து கொடுத்தது
போக, மிஞ்சினால் பொதுமக்கள் தமக்கு!
இந்தியா இதுதான்! எம்நாடும் இதுதான்!
சிந்தியது பொறுக்கிச் சிறந்திடல் எப்படி?

கழுதை தேய்ந்து கட்டெறும் பாகி
முழுதும் அதுதேய்ந்து சிற்றெறும் பாகி
இறுதியாய் ஒன்றும் இல்லாமற் போன
உறுதியைப் போல்தான் தமிழ்நாட்டு உருவம்!

ஒருபுறம் வடவர்; உட்புறம் பார்ப்பனர்,
தெருப்புறம் கன்னடர், தெலுங்கர் என்றாகிக்
கொல்லையில் கேரளர், கொடும்பட்டாணியர்
தொல்லைபஞ் சாபியர் சூழ்நிலம் தமிழ்நிலம்!
இன்றிவர்க் கிடையில்தான் எந்தமிழ் மக்கள்
நின்றாலும் படுத்தாலும் வாழ்க்கை நிகழ்த்துவர்!

இந்த நிலையினில் எந்தமிழ் வளருமா?
இந்தச் சூழலில் இனம்முன் னேறுமா?
பொதுமை மலருமா? புதுநலம் பூக்குமா
எதுதவறு, எதுசரி? எண்ணவேண் டாவா?

இவ்வாறே இருந்தால் எந்தமிழ்மொழியும்
ஒவ்வொரு நாளும் உருக்குலை இனமும்
நந்தமி ழகமும் நலிந்து நலிந்தே
இந்த உலகில் இல்லாமற் போகுமே!

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

தமிழைப் பழிப்பவன் தணல் மலையை சந்திப்பான்!

—அறிவியப் பாவலர். சாலையார்

பிறைமதியும் முழுமதியும் ஆனஎங்கள் தமிழை—
பெரியமதி வாணர்களை வளர்த்தெடுத்த தாயைக்—
குறைமதியர் யாவர்களோ குறைசொல்ல வந்தால்
குமுறுகின்ற எரிமலையாய் அவரெதிரே நிற்பேன்:
ஒருமதிக்கும் உதவாத உடைந்த கலம் எல்லாம்
உயர்வுகளை இழித்துரைக்கப் புறப்படுவதென்றால்
திருமதியன் ஒருமந்தன் செவிடாக நின்று
சிறுமைக்குத் துணையாகக் கைகட்டு வேனே?

அன்றுமுதல் இன்றுவரை அழகெடுத்த மொழியை
அறிஞர்களை அணியணியாய்ப் பெற்றெடுத்த தமிழை
இன்றினுக்கே உதவாதென்று எவைஎவையோ
சொன்னால்,
எரிமலையில் பெருமலையாய் எதிரெழுந்து நிற்பேன்;
நன்றிருக்கும் களஞ்சியத்தை நலம்வளர்க்கும் ஒளியை.—
நாவகத்தே நரம்பில்லா நடலைசில கூடி
ஒன்றினுக்கும் உதவாதென்று உரைப்பதுவோ? அங்கே
ஊமையென நான்ஒருவன் உலைந்துநிற்ப தேயோ?

வான்பிறந்த போதுமுதல் வளர்ந்துவரும் மொழியை—
மன்பதையின் வளர்ச்சிக்கே அடிஊன்றும் தாயை—
ஏன்படிக்க வேண்டுமென்றே எதுஎதுவோ சொன்னால்,
எரிமலையில் முதல்மலையாய் எதிரெழுந்து நிற்பேன்;
தேன்படிந்த திருமொழியைச், செந்தமிழைத், தாயைச்:
சிலஊமை வெறுவாய்கள் சிறியதென்று சொல்ல
நான் அதனை இருசெவியில் கேட்பதுவோ? அங்கே
தமிழனென்று பேர்வைத்துத் தளர்ந்துநிற்ப
தோயோ? ○

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, தமிழரே அறுதியாய் உரைப்பேன்!
சாகவே எனினும் ஒருங்குறச் சாவோம்!
உரிமை உரிமை உரிமை முழக்குவோம்!
நரியிடத் திருந்துநாம் நாடுபெறு வோமே! —150.

(அன்பர் கவனிக்க: 'தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி'—
ஆசிரியத் தொடர்கட்டுரை அடுத்த இதழில் தொடரும்.)

அறிஞர் சாலையாரின் அருள் நெஞ்சம்

—பெருஞ்சித்திரனார்—

எம் இளைய மகள் பிறைநுதல் குணத்தொகையன் கடந்த ஐந்தாறு மாதங்களுக்கு முன்னர் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள்.

அவள் மேல் அறிஞர்கள் சாலை இளந்திரையனார்க்கும், அவரின் அருந்துணைவி சாலினி இளந்திரையனார்க்கும் அளவற்ற தனியன்பு உண்டு. நம் குடும்பத்துப் பிள்ளைகளை அவர்களின் பிள்ளைகளைப் போலவே கருதிப் பழகும் இனிய நலம் அவர்களுக்கு இயல்பாகவே உண்டெனினும், பிறைநுதலை அவர்கள் பெற்ற பிள்ளையைப் போலவே கருதி, அவள் மேல் கொள்ளை அன்பு கொண்ட சாலையரின் பேரருளாண்மை பெரிதும் வியக்கத் தக்கது.

எனவே, பிறைநுதலின் பேறுக் காலத்திற்கு முன்னரும் பின்னரும் அவள்மேல் தனிக் கவனமும் தனியக்கறையும் காட்டி அவளின் நற்பேற்றை விரும்பி வரவேற்று மகிழ்ந்தனர். அடிக்கடி அவள் நலம் கேட்டும், அவள் இல்லம் சென்று ஆறுதல் கூறியும் வந்தனர்.

பேற்றுக்குப் பின் பிறைநுதல் பெற்ற 'சுடரொளி' என்னும் ஆண் மகவின் மேலும் அவர்கள் தம் பெயரனைப் போலவே பேரன்பு காட்டி, அவனுக்குச் சட்டைகளும், குழந்தை ஊட்ட உணவுக்கென அவ்வப்பொழுது தொகையுதவியும் பிறைக்கும் தந்து மகிழ்வுற்றனர்.

இந்நிலையில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிறைநுதலுக்குக் கருப்பையில் ஒரு கட்டி வந்து, பெருந்தொல்லை தந்து, இறுதியில் அறுவை நடந்து நலமும் ஆகிப் பிறைநுதல் இல்லம் வந்தாள்.

நோயுடலும் முதுமையும் கொண்ட அந்நிலையிலும் 'தம் மகள்' என்று எல்லாரிடத்தும் சொல்லி மகிழும் அறிஞர் சாலையார், தம் அருந்துணைவியாருடன், அண்மையில் பிறைநுதலையும் தம் பெயரனையும் பார்த்து மகிழ்ந்து, அவனுக்கு விலையுயர்ந்த சட்டையும், மகள் பிறையிடம் மருத்துவ வகையில் ஆன செலவை ஈடுகட்ட உருவா ஐநூறும் தந்து தம் பெற்றோர் மகிழ்வைப் புலப்படுத்தினர்.

இந் நிகழ்வால்—எம் உள்ளம், சாலையாரின் பேரன்பின் நன்றியுணர்வால்—பொங்கி மகிழ்ந்தது; அவர்கள் அன்புள்ளம் என்றென்றும் வாழ்க என வாழ்த்தியது.

மன்னர் புறங்கடை காத்து வறிதேயாம்
எந்நலம் காண்டும், என்(று) எள்ளற்க—பன்னெடுநாள்
காத்தவை எல்லாம் கடைமுறைபோய்க் கைகொடுத்து
வேத்தவையின் மிக்குச் செயும்.

இதழ்களின் காலத்தாழ்வைப் பொறுத்துக் கொள்க.

பொய்ம்மையும், போலிமையும், ஏமாற்றும், எத்துகளும் வஞ்சகமும் சூழ்ச்சியும் நிறைந்த இந் நாட்டின் இழிவான அரசியலுக் கிடையிலும், மன வளர்ச்சி முட்டுப்பட்டு, அறியாமையும் மூடநம்பிக்கையும் நிறைந்து மத சேற்றிலும், சாதிச் சாய்கடையிலும் விழுந்து கிடக்கும் மக்களிடையிலும், பொருளின்மைக் கிடையிலும், அறிவுணர்வும், கருத்துத் தெளிவும், கொள்கை நோக்கும் கொண்ட ஓர் இதழ் நடத்துவதென்பது மலையை மண்ணுக்கும் ஒரு கடின முயற்சியாகும்; பாலையில் கொட்டிக் கிடக்கும் மணலை வாரி அப்புறப்படுத்தும் ஓர் இயலாத செயலாகும்.

இருப்பினும் என் செய்வது? நம் இனத்தை ஈடேற்ற இவ்வரிய முயற்சிகளை செய்யத்தான் நாம் சிந்தித்து இயங்கவேண்டியுள்ளது. இல்லெனில் இவ் வெற்று வாழ்க்கைக்குப் பொருளில்லாமல், பயனில்லாமல் போய்விடும்.

எனவே, ஒன்றுக்கு மூன்றாகத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் என்று மூன்று கோணங்களையும் அளாவிச் செல்லும் இதழ்களைத் தொடங்கி ஏறத்தாழ முப்பத்தைந்தாண்டுக் காலம், தட்டுத் தடுமாறி, அன்றன்றும் ஒரு போராட்டமாக நடத்தி வர வேண்டி உள்ளது.

இவற்றுக்குச் சோறும், நீரும், ஊட்டமும், எருவுமாக அவ்வப்பொழுது உதவி வருபவர்களும் இல்லாமல் இல்லை.

இருப்பினும் 'பனி பெய்து நெல் விளையாது' எனும் பழமொழிப் படி, பெரும் பொருள் முதலீட்டில் வெளியிடப் பெற வேண்டிய இவ் விதழ்களைக் கட்டாஞ் சோற்றில் விருந்து வைப்பது போலும் முயற்சியால் அவ்வப் பொழுது நொண்டியும், தவழ்ந்தும், குறுநடையிட்டும், நடத்தி வருகிறோம்.

நம் அன்பர்கள் பணவுதவி செய்தாலும் செய்வார்களே தவிர, வினையுதவி செய்ய முன்வர மாட்டார்கள் என்பது நீண்ட காலத்திற்குப்பின் நாம் விளங்கிக் கொள்ள முடிந்தது.

நம் பால் அன்பும், பரிவும் பாசமும் பற்றும் காட்டும் ஒரு சிலரிடை இந் நிலைகளை எடுத்துக் கூறினும், அவர்கள் உள்ளத்திலிருந்து செந்நீர் வருகிறதே தவிர செயல் உதவி வருவதில்லை. வெறும் வாயுரைகளால் வெறும் செயல்களே நடக்காத பொழுது இவ் வருஞ் செயல்கள் எங்ஙன் நடந்தேறும்?

ஆகவே, நாமே அனைத்து அச்சக, இதழ்ப் பணிகளிலும், (எழுதுவது, திருத்துவது, கோப்பது, அடிப்பது, வெளியிடுவது, விற்பது போன்றவற்றிலும்) ஈடுபட்டு, நாம் தொடங்கி வளர்த்து வரும் தூய தமிழ் உணர்வும், இன, நாட்டுத் தொண்டு முயற்சியும்

சாம்பியும் சாகாமலும் இருப்பதற்கு நேரிடையாகவே உழைக்க வேண்டியுள்ளது.

இவற்றைக் கண்டும் கேட்டும் பொறுத்துக் கொள்ளாத அறவுள்ளங்களும் உறவுள்ளங்களும் இவ்விதழ்கள் வெளியீட்டை விட்டுவிட்டு நூல்களை மட்டும் எழுதி வெளியிடும்படியும், சிலர் அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்திருந்து அமரனுகும் படியும் அறிவுரை கூறினர்; கூறி வருகின்றனர்.

எம் தொண்டுள்ளம் 'இயங்காதிருப்பதே இன்பம்' (சும்மா இருப்பதே சுகம்) என்று கருதாததாலும், எந் தமிழுக்கும் எம்மினத்திற்கும் இயங்கிக் கொண்டிருக்கும் பொழுதே இழுத்துச் செல்லும் இறுதியை எதிர்பார்ப்பதாலும் எம் மக்களின் முன்னேற்றமும், அடிமை நீக்கமும், உரிமை மீட்பும், வ்வுலகில் எமக்காக அமைந்த அனைத்து வாழ்வியல் முயற்சிகளிலும் மிக மிக உயர்ந்த செயல் முயற்சியாக நாம் கருதுவதாலும், இவ்விதழ்களால் இத்துணை முட்டுப்பட்டும், குட்டுப்பட்டும், புறம் போக முடியாமல் மீண்டும் மீண்டும் கட்டுப்பாட்டுடனும், கடமையுணர்வுடனும் தட்டுத் தடுமாறியேனும் இவ்விதழ்ப் பணிகளைத் தொடர்ந்து வருகிறோம்.

அண்மையில் சிறையினின்று வெளிவந்த பின் வெளிவந்த அனைத்து இதழ்களையும் பொறியேற்றி அடித்தெடுக்கும் முயற்சியிலும் நாமே மூச்சு முட்ட முங்கி நீந்தி வருகிறோம்.

அத்துடன், நம் வீடு மாற்றும் பெரும் பணியும் வேறு இடைவந்தது. இயல்பான இதழ்களின் வெளியீட்டுக்குத் தடையாக வந்தது. நம் வீடு மாற்றம் பற்றி முன்பே தென்மொழியில் 'வீடுபேறு' (சு: 24, ஓ: 8) என்று எழுதியுள்ளோம்.

எனவே, இத்தகைய கல்லும் முள்ளும் நிறைந்த கரம்பு நிலத்தில், கண்ணுறத்தலோடும் கால் வீக்கத்தோடும், கை வலியோடும் நம்மாலும் வீறு தடை போட முடியும் என்று மூச்சு இறைக்க இறைக்க ஓடி வருகிறோம்.

அவ்வகைக் கொள்கைச் சுமையால் அழுந்தி அமுங்கிவிடாமலிருக்கத்தான், மெது மெதுவாகவேனும் இதழ்களை வெளியிட வேண்டியுள்ளது.

எனவே அன்பர்கள் காலந்தாழ்ந்து வெளிவரும் இதழ்களால் மனம் நோகாமலும், அறிவு சலிப்புறாமலும், நம் முயற்சிகளை இவ்வளவில்தான் இப்படித்தான் செய்தற்கியலும் என்று கருதி ஆறுதலும் அமைவும் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙன்
என்றும் உங்களுக்காகவே இயங்கும்
பெருஞ்சித்திர உள்ளம்.

தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை முழுமையாகச் செயல்படுத்துக!

1956-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் இன்று ஊறுபடுத்தப்பட்டு முடமாக்கப் பட்டுள்ளது.

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் உருவாக்கப்படும் கோப்புகள், ஆணைகள் ஆங்கிலத்திலேயே வெளிவருவதால், தமிழக அரசின் தலைமைச் செயலகம் ஆங்கில நாட்டில் இருக்கிறதோ என்று அய்யுற வேண்டியுள்ளது.

தமிழக அரசில் உயர் பதவிக்கு வரும் அரசு அதிகாரிகள், தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை மதித்து நடக்க வேண்டும்; தமிழ் மக்களுக்காகவே கடமையாற்றுவதோடு மக்கள் மொழியான தமிழை மதித்துப் போற்ற வேண்டும் என்னும் உணர்வற்றவர்களாகக் காணப்படுகிறார்கள்.

இது போன்ற உணர்வுதான் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்களிலும் காணப்படுவதோடு, மாநகராட்சி, தமிழ்நாடு சிறு தொழில் முதலீட்டுக் கழகம், வீட்டு வசதி வாரியம், உப்பு நிறுவனம் போன்ற பல்வேறு அரசுச் சார்பு நிறுவனங்களில் ஐந்து விழுக்காடு அளவுக்குக்கூடத் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நடைமுறைப்படுத்தப் பெறவில்லை.

சட்டத்துறை, சிறைத்துறை, கணக்காளர் அலுவலகம் போன்ற அமைப்புகளுக்குத் தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தில் கொடுக்கப் பெற்றுள்ள நெறி(விதி)விலக்குகள் தமிழ் ஆட்சிச் சட்டதை முற்றிலுமாகச் சிதைத்துவிட்டன.

தமிழக அரசின் தமிழ் ஆட்சி மொழிச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது மாவட்ட அளவில் கீழ் நிலையிலிருந்து ஓரளவே செயற்படுத்தியது. இந்நிலையினைத் தலைகீழாக மாற்றித் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தின் எல்லாத் துறைகளிலும் மேல் நிலையிலிருந்து எல்லா நடவடிக்கைகளையும் தமிழிலேயே நிகழ்த்தியிருந்தால் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் எல்லா நிலைகளிலும் மக்கள் போற்றும் வண்ணம் நிறைவு பெற்றிருக்கும்.

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்னும் ஐந்தாண்டு நடைமுறைச் சட்டம், மூவாண்டு முனைப்புத் திட்டம் என்னும் நடைமுறைத் திட்டங்கள் உருக்குலைந்து விட்டன.

தமிழ் ஆட்சி மொழிச்சட்டம் தடைப்பட்டு நிற்பதற்குக் காரணங்கள்:

1. தமிழக ஆட்சியாளர்கள் கல்விக் கொள்கைக்கு என வகுத்த இரு மொழிக் கொள்கையினை ஆட்சி மொழிக் கொள்கையெனத் தவறாகப் புரிந்துகொண்டு; ஆங்கில மொழிக்குப் பரிந்து பேசிக் குற்றேவல் செய்யும் ஏவலர்களாக மாறிவிட்ட நிலை.

1. 1) தமிழ் வளர்ச்சி இயக்ககம்; 2) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்; 3. மொழி பெயர்ப்புத்துறை; 4. செந்தமிழ்ச்சொற் பிறப்பியல் அகர முதலித்திட்டம்; 5. தொல் பொருள் ஆய்வுத் துறை; 6. அருங்காட்சியகம்; 7. திருக்குறள் நெறி பரப்பு மையம்; 8. கீழ்த்திசை ஓலைச்சுவடி நூலகம்; 9) இயலிசை நாடக மன்றம்; 10. இசைக் கல்லூரி; 11 ஓவிய நுண்கலைக் குழுமம்; 12) தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுச் செயலகம் போன்ற தமிழ் வளர்ச்சி அமைப்புகளின் செயற்பாடுகள் ஆக்கமும் ஊக்கமும் தருவனவாக அமையவில்லை. மேற்கண்ட அமைப்புகளில் பொறுப்புக்கு வருவோர் தமிழ்ப்புலமையும், தமிழில் ஈடுபாடும் கொண்டவ-ராக இருக்கவேண்டும் என்னும் வரையறை இல்லாமையால், மேற்கண்ட அமைப்புகள் தமிழ் வளர்ச்சி என்னும் பெயரால் சடங்குகளை நடத்திக் கொண்டிருக்கின்றன.

வட இந்திய மாநிலங்கள் அனைத்தும் அவ்வம் மாநில மொழிகளிலேயே அனைத்துச் செயற்பாடுகளையும் நிகழ்த்தி வருகின்றன. ஆந்திர அரசு 1984-ஆம் ஆண்டே ஆங்கிலத்தின் பயன்பாட்டை அரசு அலுவலகங்களில் நீக்கிவிட்டது.

1993-ஆகத்து 15-ஆம் நாள் முதல் கன்னட அரசும், கன்னட எழுச்சி ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் அரசு அலுவலகங்-களில் ஆங்கிலப் பயன்படுத்தத்துக்குத் தடை செய்துள்ளது. மேலும் கருநாடக அரசு மாதிரிக் கன்னடப் பயிற்று மொழிப் பள்ளிகள் தொடங்குதல், கன்னடம் பயின்றோருக்கு அரசு நிறுவனப் பணிகளில் இட ஒதுக்கீடு செய்தல், கன்னட மொழி வளர்ச்சிக்கு உதவுதல் என அளப்பரிய செயல் வடிவம் கொடுத்-துள்ளது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து முதலமைச்சர் பொறுப்புக்கு வருகிறவர்கள், தமிழ்நாட்டின் ஆளுமையினை ஆங்கிலத்தில் நிகழ்த்தும் மனநிலையில் உள்ளமையால் தமிழ் வளர்ச்சியும், எழுச்சியும் பெருமளவு தடைப்பட்டு வருகிறது.

ஆட்சி மொழிச் சட்ட நடைமுறைக்கான வாயில்கள்:

1. தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தில் அளிக்கப்பெற்றுள்ள நெறி(விதி)விலக்குகள் அனைத்தையும் திருத்தப் பெற்றுக் கொள்ளல்.

2. தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுச் செயலகம், தமிழ் வளர்ச்சி இயக்கம் உள்ளிட்ட தமிழ் வளர்ச்சி அமைப்புகளில் பொறுப்புக்கு வருவோர் தமிழ்ப் புலமையும், ஈடுபாடும் கொண்டவராக அமைய சட்ட வடிவம் அமைத்தல்.

3. தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை நிறைவேற்றாத தமிழில் கையொப்பமிடாத அரசு அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளல்.

4. தமிழக அரசு தலைமைச் செயலகம், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம், மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க தமிழ்ப் புலமையும், தமிழில் ஈடுபாடும் கொண்ட 'தமிழ்ச் சான்றோர்' குழுவொன்றை அமைத்தல்.

5. தமிழ் ஆட்சி மொழி ஆணையகத்தை அரசு கலைத்துள்ளமை, தமிழ் வளர்ச்சிக்குக் கேடாக எடுக்கப் பெற்ற முடிவாகும். எனவே தமிழ் ஆட்சி மொழி ஆணையகத்தைத் திறனும் வலிமையும் கொண்ட அமைப்பாக மீண்டும் உருவாக்கிடல்.

6. உயர் நெறி(நீதி) மன்றத்தில் தமிழில் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கொண்டு வரப்பட்ட சட்டம்,1976-இல் ஆளுநர் ஆட்சியின்போது திரும்பப் பெறப்பட்டது. மீண்டும் உயர் நெறி மன்றத்தில் தமிழில் தீர்ப்பு வழங்க வகை செய்யும் சட்ட வடிவினைக் கொண்டுவரக் கோருதல்- கலைக் களஞ்சியம், சிறுவர் கலைக் களஞ்சியம் இவற்றை உருவாக்க அமைக்கப் பெற்ற தமிழ் வளர்ச்சிக் கழகம், திறம்படச் செயல்படவில்லை. எனவே, அதன் பொறுப்பை அரசே ஏற்றுக் கொள்ளல்.

7. தமிழை வளப்படுத்தப்பட வேண்டிய அமைப்பான 'அகர முதலித் திட்டம்' நோய்வாய்ப்பட்ட நொண்டி மாட்டினைப் போல் மெல்ல மெல்ல செயலிழந்து காணப்பெறுகிறது. தமிழ் வளர்ச்சியின் நலன் கருதி 'அகர முதலித் திட்ட'த்தை வலுப்படுத்தி அமைத்திட அரசு நடவடிக்கை மேற்கொள்ளல்.

8. தமிழ் நாட்டு வணிக நிறுவனங்கள், தொழிற்கூடங்கள் முதலிய அனைத்து நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளிலும் தமிழ் முதன்மை பெறும் அரசாணையினை நடைமுறைப்படுத்தாத நிறுவனங்களின் உரிமங்களைத் திரும்பப்பெற ஆணை பிறப்பித்தல்.

பயிற்று மொழிக் கொள்கை:

'தமிழ்ப் பயிற்று மொழிக் கொள்கை'யினை 1963—1968 ஆகிய ஆண்டுகளில், ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த அரசுகள் ஐந்தாண்டுகளில் நிறைவேற்றப் போவதாக அறிவித்தன. ஆனால், தமிழ் வழிக் கல்விக்கான மாற்றம் எதுவும் இதுவரை உருவாக்கப் பெறவில்லை. மாறாகத் தமிழ்நாட்டில் முப்பதாயிரம் ஆங்கில மழலைப் பள்ளிகளும், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட 'மெட்ரிகுலேஷன்'(பதின்பள்ளி) பள்ளிகளும் நாற்பத்தொன்பதுக்கும் மேற்பட்ட ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளும் உருவாகியுள்ளன. இவை தவிர இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆங்கில-இந்தி வழி நடுவண் அரசுப் பள்ளிகளும்,தோன்றித் தமிழ்நாட்டை ஒரு குட்டி ஆங்கில நாடாக உருப் பெறச் செய்துள்ளன. தமிழ் நாட்டில் தமிழ் மொழியினை ஒரு பாடமாகக் கூடக் கற்காமல்

எத்தகைய உயர் பட்டங்களைப் பெறவும் உயர் பதவிகளை ஆளுமை செய்யவும் முடியும் என்னும் இழிநிலை உள்ளது.

தமிழ்வழிக் கல்விக்கான முதற் படி:

1. ஆங்கில மழலைப் பள்ளிகளை ஒழுங்குபடுத்த முனைவர் சிட்டிபாபு தலைமையில் அமைக்கப் பெற்ற குழுவின் அறிக்கையினை வெளியிட்டு, நடைமுறைப்படுத்த வேண்டுதல்;

2. ஆங்கில மழலைப் பள்ளிகளைத் தமிழ்வழிப் பள்ளிகளாக மாற்றிடவும், உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளில் தமிழ் வழிக் கல்வியினை நடைமுறைப்படுத்தும்போது வேற்று மாநிலத்தில் வாழுகின்ற தமிழ் மக்களுக்குக் கல்வி வாய்ப்பில் எத்தகைய உரிமை வழங்கப் பெறுகிறதோ, அதே உரிமையினை இங்கு வாழும் மொழி வழிச் சிறுபான்மையினருக்கும் வழங்குவது;

3. தமிழ் வழிக் கல்வியினை நிலைநாட்ட உயர்நிலை, மேனிலை, பல்கலைக் கழகம், மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், வேளாண்மை ஆகிய அனைத்துக் கல்விகளையும் தமிழ்வழிக் கற்பிக்க உரிய வகுப்புகளைத் தொடங்க வேண்டுதல்;

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் அனைத்துத் தேர்வுகளிலும், ஆங்கிலம் கட்டாயம் என்றிருக்கும் நிலையினை மாற்றி, தமிழ் வழித் தேர்வு என்னும் கொள்கையினை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுதல்;

5. தமிழ்வழிப் படித்தோர்க்கு வேலை வாய்ப்பு முன்னுரிமை என்னும் கோட்பாட்டை அரசு உருவாக்க வேண்டுதல்.

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்:

1937-ஆம் ஆண்டு தொடங்கிப் பல கால கட்டங்களில் இந்தித் திணிப்பு—தமிழ் மண்ணில் பல நிலைகளில் இந்திய அரசால் ஏவி விடப் பெறுகிறது. இந்தி எதிர்ப்புப் போரில் களங் கண்டு இன்னுயிர் துறந்த ஈ(தியா)கிகளுக்கு என்றும் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்; சிறைக் கோட்டம் புகுந்த ஈ(தியா)கச் செம்மல்களைப் போற்றுவோம்;

இந்தித் திணிப்பு வானொலி, தொலைக்காட்சி, வைப்பகங்கள், தொடர்வண்டி அமைப்பு, உணவுக் காப்பீட்டுக் கழகம், வாணாள் காப்பீட்டுக் கழகம், வானூர்தி நிறுவனம், படைப் பிரிவுகள் எனப் பல்வேறு நிலைகளில் பெருகிக் கொண்டே வருகின்றது;

தமிழ் மக்கள் மீது நேரடியாக இந்தியைத் திணிக்கத் துணிவில்லாத இந்தியப் பேரரசு தன் வல்லாண்மையினைப் பயன் படுத்தி மக்களின் வாழ்வு நிலைகளில் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் மறைமுகமாகத் திணிக்கிறது;

தொலைக்காட்சி அமைப்பின் வாயிலாக இந்திப் படையெடுப்பே நடைபெறுகிறது; இந்திப் படையெடுப்பைத் தமிழ்

மக்கள் எதிர்த்துக் களம் காணும் காலம் விரைந்து உருவாகும். 'தலைநகர்த் தமிழ்ச் சங்கமும்' அக்களத்தில் தன்னை இணைத்துக் கொள்ளும்.

ஆங்கிலம் தொடர்பு மொழியே:

தமிழ் நாட்டின் ஆட்சி மொழி தமிழே! பயிற்று மொழியும் தமிழே! என்னும் நிலை உருவாக்கப் பெறவேண்டும். தமிழ்நாட்டு மாணவன் ஒருவன் ஆறும் வகுப்புக்குமேல் ஆங்கிலத்தை ஒரு பாட மொழியாகக் கல்வி பெறலாம். ஆங்கிலத்தைச் செம்மையாகவும், திறம்படவும் கற்றுக் கொள்ளத்தக்க வகையில் அரசு பாடத் திட்ட அமைப்பை மாற்ற வேண்டும். பத்தாம் வகுப்புக்கு மேல் ஒன்றிற்கு மேற்பட்ட மொழிகளை அவரவர் விருப்பத்துக்கும் திறனுக்கும் ஏற்ற வகையில் கற்றுக்கொள்ளலாம்.

ஒருமொழிக் கொள்கையே உயர்ந்த கொள்கை:

இன்றைய நிலையில் மும்மொழிக் கொள்கை ஏமாற்றுக் கொள்கையாகவும், இருமொழிக் கொள்கையே தமிழ் மக்களை ஆங்கில அடிமைகளாக மாற்றும் கொள்கையாகவும் காணப் பெறுகிறது.

வளர்ந்து வரும் தேசிய வளர்ச்சியில் மண்ணின் மொழியே மக்களை ஆளவேண்டும் என்னும் உணர்வு எல்லா மாநிலங்களிலும் நிலைகொண்டு வலுப்பெற்றுவிட்டது. தமிழகத்தில் மக்கள்மொழி வேறு, ஆட்சி மொழி, பயிற்று மொழி வேறு என்னும் நிலை சங்க காலத்துக்குப் பின் தொடர்ந்து நிலைபெற்று வருகிறது. மக்கள் மொழியான தமிழைத் தமிழ் மக்களின் அனைத்து வாழ்வு நிலைகளிலும் பயன்படும் மொழி என்னும் நிலை உருவாக ஒருமொழிக் கொள்கையே வகை செய்யும். எனவே, ஒருமொழிக் கொள்கையே உயர்ந்த கொள்கை எனப் போற்றுவோம்.

இந்த உயிர்க் கொள்கை வெற்றி பெற ஓரணியில் திரளுவோம். 'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு.' 'தலைநகர்த் தமிழ்ச் சங்கம்' தமிழ் ஆட்சி மொழி, பயிற்று மொழிக் கொள்கையை வலியுறுத்தி உண்ணா நோன்பு, பேரணி, முழக்க ஆர்ப்பாட்டம், மாநாடுகள் எனப் பல அறவழிப் போராட்டங்களை நடத்தியுள்ளது. அவற்றுள் 17—5—1993 அன்று முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. தலைமையில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரிக் கோட்டைமுன் மறியலில் கைதானோர் பட்டியலையும், 24—9—1993 அன்று பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்கள் தலைமையில் ஆங்கில அரசாணை எரிப்புப் போராட்டத்தில் கைதானோர் பட்டியலையும் வெளியிட்டுத் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் மொழி உரிமைப் போரை நடத்திக் கொண்டிருக்கிறது.

(நன்றி: தனிவெளியீடு: தலைநகர்த் தமிழ்ச் சங்கம்.)

தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலத் தலைப்பு வைப்பதைத் தடைசெய்ய வேண்டும்!

திரைப்படக் கலைஞர் மன்சூர்-அலிகான் அறிக்கை.

தமிழ்ப் படத்துறை எதை நோக்கிச் செல்கிறது என்பதை விளங்கிக் கொள்ளமுடியவில்லை. முழுக்க முழுக்க ஆங்கில மயக்கத்தில் அழிந்து கொண்டிருக்கிறது. 'மம்மி டாடி', ''மம்மி மம்மி,' 'மை டியர் சன்', 'ஐ லவ் இந்தியா'. 'மே ப்ளவர்', 'லவ் ஸ்டோரி', 'டூயட்' 'ஜென்டில் மேன்', 'அரஸ்ட் வாராண்ட்' இப்படியாகப் படத்தின் பெயர்கள் போகின்றன, என்ன இவர்கள் அமெரிக்கா-வில் வாழும் ஆங்கிலேய மக்களுக்கா படமெடுக்கிறார்கள்? ஹாலிவுட் தகுதிக்குப் படமெடுக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு அரைவேக்காட்டு ஆங்கிலத்தில் இலக்கண இலக்கியத்-தில் படப்பெயர் வைத்து மகிழ்ந்து கொள்ளுகிறார்கள். இவ்வளவு ஏன்? புரட்சித் தமிழ் சத்தியராசு அய்யா அவர்களின் படத்தின் பெயரே ''ஏர்போர்ட்''. ''தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா'' என்று சொல்லும் விசயகாந்த் அய்யா அவர்களின் படத்தின் பெயரோ 'ஆனஸ்ட் ராஜ்', இயக்குநர் சிகரத்தின் படத்தின் பெயரோ ''டூயட்'' இவ்வளவு ஏன்? ''என் இனிய தமிழ்மக்களே' என்று தொடங்கும் இயக்குநர் 'பாரதிராசா' அய்யா அவர்களின் படத்தின் பெயரோ ''கேப்டன் மகள்''. இவர்கள் தமிழை வளர்க்க வேண்டாம். குறைந்த அளவு தமிழை இழிவுபடுத்தாமலாவது இருக்கலாம் இல்லையா? எந்த ஆங்கிலப் படத்திற்காவது தமிழில் பெயர் வைக்கிறார்களா? எந்தப் பண-வுதவி செய்பவர்கள் ஆங்கிலத்தில் பெயர் வைத்தால்தான் பணம் தருவேன் என்று சொல்கிறார்கள்? அருள் செய்து தமிழை அடகு வைக்க வேண்டாம்.

ஒரு புறம் 'வித்யோதயா', 'பாலலோக்' ''நவோதயா'' என்று பள்ளிக் கூடங்கள் வேற்று மொழிகளை ஓதிக்கொண்டு, தமிழை ஓரங்கட்டிக் கொண்டிருக்க, தமிழ்த்திரைப் படத்துறை-யும் தமிழை இழிவு படுத்துவதா? வெட்கக்கேடு. தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலத்தில் பெயர் வைப்பது, ''பெற்ற தாயை வீதியில் துரத்திவிட்டு, மாற்றாந் தாய்க்கு மகுடம் சூட்டுவது போன்றது', தமிழ்ப் படங்களுக்கு ஆங்கிலத்தில் பெயர் வைப்பதை, உடனடி-யாகத் தடுத்து நிறுத்தப் படவேண்டும். இவ்வளவு ஏன்? தமிழ்த் திரைப்படச் சங்கம் இதில் தலையிட்டு உடனடியாக தமிழில் பெயர் வைக்கக் கேட்டுக் கொள்ளவேண்டும்; தணிக்கைக்குழு ஆங்கிலத்தில் தமிழ்ப் படங்களுக்குப் பெயர் வைத்தால் தணிக்கை செய்ய இசைவளிக்கக் கூடாது; இத்துடன் மொழி-மாற்றம் செய்யப்படும் படங்களுக்கும் ஆங்கிலத்தில் பெயர் வைப்பது வழக்கமாகிவிட்டது; தமிழில் எடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் தமிழில்தான் பெயர் வைக்கவேண்டும். ஆங்கிலத்தில் படமெடுங்கள்; ஆங்கிலத்தில் பெயர் வையுங்கள்; மறுப்பில்லை,

ஆங்கிலத்தில் பெயர் வைக்கும் இந்த மாறுபாடான (விபரீத) போக்கு, தந்தை பெரியார், பெரியவர் ஆதித்தனார், மற்றும் மருத்துவர்(டாக்டர்) அய்யா, அறிஞர் பெருஞ்சித்திரனார், மற்றும் பெரியவர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியவர்களின் கன்னி முயற்சிகளை அவர்களது ஈவு(அர்ப்பணிப்பு)களைச் சிறுமைப்படுத்துவதாகும்; சிதறடிப்பதாகும். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்; இந்தப் போக்குத் தொடருமானால் கடுமையாகப் போராட்டம் நடத்துவேன்.

—மன்சூர் அலிகான்.

(பின் குறிப்பு:) இந்த அறிவிப்பிற்குப் பின்னர் திரு.மன்சூர் அலிகான் அவர்கள் இந்த வேண்டுகோளை வலியுறுத்தி, கடந்த 1-1-94 அன்று சென்னை, திருவள்ளுவர் கோட்டம் அருகில் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை அடையாள உண்ணா நோன்பு இருந்ததும், அவரை திரு. வை.கோபால்சாமி, (தி.மு.க.) திரு. ப. நெடுமாறன்(தமிழர் தேசிய கட்சி), பேரா.தீரன்(பாட்டாளி மக்கள் கட்சி),மற்றும் பாவலரேறு பெருஞ்சித்திரனார்(உ.த.மு.க) பாவலர்கோ.வா.மு.சேதுராமன் மற்றும் திரைப்பட அதிபர்கள், இயக்குநர்கள், நடிக, நடிகையர், திரைப்படத் தொழிலாளர்கள் பலர், புத்தாடைகள் போர்த்தியும் மாலையிட்டும் நேரில் சென்று வாழ்த்தியும் உரையாற்றியும் ஆதரவு காட்டினர் என்பதை அனைவரும் செய்தித்தாள்கள் வழி அறிந்திருக்கலாம்.)

ஆசிரியரை நிகழ்ச்சிக்கு அழைக்கும் அன்பர்கள் கவனிக்க.

ஆசிரியர் சிறையிலிருந்து வெளிவந்த பின்னர் அவரின் இதழ்ப் பணிகளும், நூல் பணிகளும், பிற சொற்பொழிவுப் பணிகளும் மிகுந்து ஓய்வின்றியும் ஒழிவின்றியும் இயங்க வேண்டியுள்ளதால், ஆசிரியர் வெளியூர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு இடையூறாக உள்ளது; எனவே அன்பர்கள் இனிமேல் பொதுவான நிகழ்ச்சிகளுக்கு ஆசிரியரை அழைத்துத் தொல்லை தர வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள். பெரிய சிறப்பு நிகழ்ச்சிகள், மாநாடுகள் போன்றவற்றிற்கே, இனி, ஆசிரியர் பணியைப் பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்.

அவ்வாறு ஆசிரியரை அழைக்கின்ற பொழுதும் இனி, ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் நிகழ்ச்சித் தொகையாக உரு 500-உம் (ஐநூறு) போக்குவரத்துத் தொகையாகத் தொடர்வண்டிக் கட்டணமும் படுக்கைக் கட்டணமும் இடைச் செலவுத் தொகையும் முன்கூட்டியே அனுப்பி நிகழ்வைப் பதிவு செய்து கொள்ளவும் கேட்டுக் கொள்கிறோம்

அமைச்சர்

வில(ா)ங்கு

நாடக ஆக்கம்: அதியமான்

(பாவலரேறு அவர்களின் 'பாவியக் கொத்'தில் ஒரு மலர்)

காட்சி – 4

உறுப்பினர்: மனைவி பொன்னம்மாள், பயணி ஒருவன், மிதிவண்டி ஓட்டுபவன்.

இடம்: பேருந்து நிறுத்தம்.

நிலை: பல திங்களுக்குப்பின் ஒருநாள் கணவன் நினைவு வர வெள்ளிக்கிழமை விடுப்பு எடுத்துக் கொண்டு காரியும், ஞாயிறும் ஊரில் கணவனோடு தங்கப் புறப்பட்டுப் பேருந்து நிறுத்தத்தில் பொன்னம்மாள் நின்றுள். பயணிகள் பலரும் நின்றனர்.

மனை-பொன்: (அண்மையில் நின்ற பயணியிடம்) ஏனய்யா வண்டியைக் காணோம்; வெகுநேரம் ஆகிவிட்டதே.

பய: ஆமாம். தெரியவில்லை. ஒருவேளை வண்டி பழுதாகி இருக்கலாம்.

மனை-பொன்: (பதற்றத்துடன்) அப்படியும் இருக்குமோ?

பய: ஏனிருக்காது; இந்தச் சாலையில் ஓடும் வண்டி வந்தால்-தான் உறுதி. இந்தச் சாலையைப் பழுது பார்க்காமலே பழுது பார்க்கப்பட்டதாய்க் கணக்குக் காட்டி ஓர் அரசியல் வழக்கர் பணத்தை வாங்கிக் கொண்டார்.

T. 5848

மனை-பொன்: அப்படியா! அதிகாரிகளுமா?

பய: என்னங்க, நாடு இருக்கிற நிலைமை தெரியாதா? நாள்-தோறும் செய்திகளைப் படிக்கிறீர்களல்லவா...எதற்கெடுத்தாலும் அரட்டல், மிரட்டல், கையூட்டு, கள்ளக் கணக்கு இப்படியேதான் அரசு நடக்கிறது. கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம்வரை பித்த-லாட்டங்கள் நடக்கின்றன; எவனும் எதையும் பேசமுடியாது. பேசினால் 'தடா'புடா. நீங்கள் யாரென்று தெரியவில்லையே?

மனை-பொன்: நான் இந்த ஊருக்குப் புதிதாக மாறுதலாகி வந்திருக்கிறேன்—ஆசிரியை.

பய: வேலைக்கு வந்து எத்தனை நாளாச்சோ?

மனை-பொன்: இப்பத்தான் ஒரு நான்கு ஐந்து திங்கள் ஆச்சு.

பய: வேலை வாங்கப் பணம் எவ்வளவு கொடுத்தீங்க?

மனை-பொன்: அதையெல்லாம் ஏன் கேட்கிறீங்க?

பய: ஏன் கேட்கிறேனா? எனக்கென்ன தெரியாதா, ஒரு முப்பதினாயிரம் கொடுத்திருப்பீங்க. பல்லில்லாத கிழவிகூட கையூட்டைத் திருத்தமாச் சொல்லுகிறுள்.

மனை-பொன்: ஆமாம், ஆமாம், இருபதினாயிரம்.

பய: நீங்க இருபதினாயிரம் கொடுத்திருக்கீங்க; எங்க பட்டணத்திலே கழிப்பறைத் தொழிலாளி வேலைக்கு அஞ்சாயிரம் கொடுக்-

கணும்: அப்படியானுல்தான் வேலை: கடைச் சரக்குக்கு விலை வைத்தது மாதிரி அரசியல் நடக்கும்; எந்த வேலைக்கும் விலைப் பட்டியல் வைத்துவிட்டார்கள். உணவுப் பங்கீட்டு அட்டை வாங்க உருவாய் இருநூறு கொடுக்கணும். சந்தி சிரிக்குது, போங்க!

மிதி.வ.ஒட்: (மிதிவண்டியில் வந்து கொண்டு) இன்னிக்குப் பேருந்து பழுது. அதோ அந்தப்பக்கம் வண்டி அச்சு ஒடிந்து கிடக்குது. இந்தச் சாலை கிடக்கும் அழகில் வண்டிக்கு அச்சு மட்டுமா ஒடியும்: பயணிகளுக்கு இடுப்பும் ஒடியும். எல்லாரும் வீட்டைப் பார்த்துப் போங்க.

பய: அம்மா கேட்டீகளா, பேருந்து பழுதாம், இன்னிக்கு ஊருக்குப் போக முடியாது; வந்தவழியே திரும்புங்கள். நானும் போகிறேன்.

(போய்விடுகிருர்கள்) திரை.

காட்சி—5

உறுப்பினர்: பொன்னம்மாள், பள்ளிக் காவலன் ஒருவன்.

இடம்: பொன்னம்மாள் வீடு பின் பள்ளிக்கூட அறை.

பொன்: (பேருந்து நிறுத்தத்திலிருந்து விடு வந்து திறந்து கொண்டே) இன்று பார்த்து அவர் நினைவு வந்தது. பேருந்தும் இன்றைக்கா பழுதாக வேண்டும்? (மணி 10 அடிக்கிறது. படுக்கையில் சாய்ந்து) விடுப்பு எடுத்தும் வீணுகப் போனது. நாளைக்காவது போக முடியுமோ? என்னவோ?

பள்-காவ. (கதவைத் தட்டி) அம்மா! அம்மா!

பொன். (உள்ளிருந்து) யாரது?

பள்-காவ: நான்தான் பள்ளிக் காவலன்.

பொன், என்ன வேண்டும் இந்நேரம்?

பள்-காவ: கதவைத் திறவுங்கள் சொல்லுகிறேன்.

பொன். வெளிவிளக்கைப் போட்டுக் கதவைத் திறந்து) என்னப்பா என்ன? இந்நேரம் வந்தாய்?

பள்-காவ: அவர் வந்தார். இம்மா நேரமும் இங்கேதானிருந்தார்; நீங்களில்லையென்றதும் பள்ளியில் போய் இருக்கிறுர். உங்களைப் பேருந்து நிறுத்தத்தில் போய்ப் பார்த்தேன். பேருந்து பழுது என்றதும் வீட்டிற்கு வந்திருப்பீர்கள் என்று வந்தேன். விரைவாக வருவீர்களாம். பள்ளியில் அவரிருக்கிறுர்; (சிறிது தள்ளிப்போய் நிற்கிறுன்)

பொன். (தனிமொழி) ஓ கோ! கணவரே வந்துவிட்டார் போல. வண்டி பழுதே? எப்படி வந்திருப்பார்? நல்லவேளை அவராக இருக்கவேண்டும்: (ஆடையைச் சரிசெய்து கொண்டு வீட்டைப் பூட்டி விட்டு விரைந்து பள்ளி நோக்கிச் செல்லுகிறுள்) பள்ளிக் காவலனும் உடன் முன் செல்லுகிறுன்)

பள்-காவ: (அவனிருக்கும் அறையைக் காட்டி) உள்ளேதான் இருக்கிறுர், போங்கள், (காவலன் சட்டென்று போய்விட்டான்) அறைக்கதவு திறக்கப்படுகிறது:

பொன்: (தன் கணவர்தான் உள்ளிருப்பாரென்று நினைத்து உள்ளே போகிருள். கதவு தாழிடப்படுகிறது). ஆ! யார் நீ? என்னை ஏமாற்றி வரச் செய்திருக்கிருய்.

ஒரு: ஆமாம் உன்னை அடைய ஒரு நாளா? அப்பா, பலநாள்கள பட்டினி கிடந்திருக்கிறேன். வா. வா உனக்கு வேண்டியதை எதைக் கேட்டாலும் தருவேன்.

பொன்: ஏ. விலங்கினமே. இன்னொருவருடைய மனைவி நான். என்னை நீ கரவாக வரச் செய்து கற்பழிக்கவா போகிருய்?

ஒரு: என்ன கற்பு? (பிடித்து இழுக்கிருன்)

பொன்: ஏய்! என்னை ஒன்றுஞ் செய்யாதே. உன் மகளுக்கும் எனக்கும் வேற்றுமை இல்லை. என் உயிருக்கு உலை வைத்து விடாதே. கதவைத் திற. உன் பசியை உன் மனைவியிடம் தீர்த்துக் கொள்.

ஒரு: அது தெரியும். வா என்ருல் வந்துவிடு. அல்லது கொன்று விடுவேன்.

பொன்: தாழ்வில்லை; என்னைக் கொன்றுவிடு.

ஒரு: கொல்வதா? (பிடித்திழுத்துக் கற்பழித்துவிட்டு ஓடிவிடுகிருன்)

பொன்: (மயக்கமாய்க் கிடந்து தன் அவல நிலையை உணர்ந்து எழுந்து குடியிருக்கும் வீட்டில் வந்து கட்டிலில் சாய்ந்து கிடக்கிருள். சிறிது நேரம் கழிய தன்னிலையைக் கண்டு கதறி அழுது புலம்புகிருள்).

பெண்ணினத்திற்கு இரங்குவதாய்க் கூறிப் பிதற்றும் மக்கள் கூட்டமே! விலங்காகத் திரியும் கயவர்களை இன்னும் வைத்துக் கொண்டுதானே இருக்கிருய். (தலையிலடித்து) வெளியில் அறநெறி பேசி உள்ளே கள்ளனுக இருப்பவர்களைக் காறித் துப்பவில்லை. கண்டதுண்டமாக வெட்டவில்லை. ஊமை செய்யும் சொற்பொழிவைச் செவிடன் கேட்டது போல பெண்ணினம் இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறது. அறநெறி பேசும் கரவானவர்க்கெல்லாம் இந்த நாட்டில் தலைவர் பட்டம். அக நூல் கற்ற கல்வித்துறையே இப்படி எத்தனைப் பெண்களுக்குத் தீங்கு செய்திருக்கிருய்? அறிவொளி பரப்பலாம். எங்கே அறிவு படர்ந்திருக்கிறது? அதிகாரம் கொண்டு அறத்தைக் கொல்லும் துறைக்கு அறிவொளிப் பட்டம். சீ. சீ. (கல்விச் சான்றிதழைக் கிழித்து) பண்பைக் காக்க வேண்டிய அன்புத் துறை கல்வித்துறை. அந்தத்துறை என் சீரழிவிற்குக் காரணியமாகத் தந்த சான்றிதழ் இனி வேண்டவே வேண்டாம் போ. (மயங்கி விழுந்து விடுகிருள்)

திரை.

காட்சி—6

உறுப்பினர்கள்: மனைவி பொன்னம்மாள், அவளுடைய கணவன்.

இடம்: சிற்றூர் வீடு
காலம்: மாலை

கண: (கணவன் மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் வரை மனைவி பொன்னம்மாளின் வரவை எதிர்பார்த்து மாலையில் சிற்றூருக்கு வருகிறான். வந்து, தன் மனைவி வீட்டில் படுக்கையாயிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்து) ஆ! என்ன பொன்னம்மாள் (கையால் தலையைத் தூக்கி) பொன்னம்மாள், பொன்னம்மாள்! பேச்சில்லை! என்ன நேர்ந்தது? (தண்ணீரை முகத்தில் தெளித்து) பொன்னம்மாள்!

மனை-பொன்: ஆ! அத்தான்! நான் செத்துக் கொண்டிருக்கிறேன், அத்தான்!

கண: ஏன்? பொன்னம்மாள் என்ன நடந்தது?

மனை-பொன்: ஒரு விலங்கு மாந்த உருவத்தில் என்னைக் கற்பழித்து விட்டது, அத்தான், கற்பழித்துவிட்டது!

கண: யாரவன் சொல்? அவனைத் துண்டு இரண்டாக வெட்டி வீழ்த்துகிறேன். சொல்; யாரவன்?

மனை-பொன்: யாரென்று தெரியவில்லை. முன்பின் பார்த்தறியாத ஒரு நாய்! எச்சில் நாய்.

கண: அப்படியா? அந்த நாயைப் பழி வாங்கியே ஆகவேண்டும்; கவலைப்படாதே எழுந்து வா. உன்னைப் புண்படுத்திய அந்த திருட்டு விலங்கை வதைகொலை செய்கிறேன்.

மனை பொன்: புலன் தெரிய வேண்டுமே.

கண: ஏன் முடியாது?

மனை-பொன்: (அவன் தோளில் சாய்ந்து) ஆ! அத்தான் எனக்கினி உயிர் வேண்டாம். உங்கள் உரிமையை எச்சிலாக்கியவனை

கண: (சட்டென்று). சுட்டெரிக்கிறேன், பொன்னம்மாள்! வா. அந்த மாட்டுக்காரப் பயலை முகமுகமாய்ப் பார்த்துச் செய்ய வேண்டியதைச் செய்வோம்.

(இருவரும் நடந்து தெருவழி செல்லுகின்றனர்) (திரை)

காட்சி—7

உறுப்பினர்: ஊரவை, அவைமுதல்வன், பொன்னம்மாள் அவள் கணவன்.

இடம்: ஊரவை மன்றம்.
காலம்: இரவு.

அவை-முதல்: (அவையில் கூட்டம் கூடி இருக்கிறது. அவை முதல்வன் நிமிர்ந்து) நான் என்ன சொல்லப்போகிறேன் என்றால், நம் ஊரில் என்னவெல்லாமோ நடக்கிறது; யாவற்றையும் கடவுள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். நம்மை இயக்குபவரும் அவர்தான். அவர் இல்லாவிட்டால் நாமும் இல்லை. ஏன் உலகமே இல்லை என்பேன்.

(தொடர்ச்சி 23-ஆம் பக்கம்)

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

O : 1547: ஐயா, தாங்கள் நல்ல உடல்நலத்துடனும் வளத்துடனும் இருக்க வேண்டுமென நான் விரும்புகிறேன். தங்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்யக் கோரி நானும் என் நண்பர்களும் தமிழக அரசிற்கு அஞ்சலட்டை மூலம் கோரிக்கை விடுத்திருந்தோம். ஐயா, திருக்குறள் மெய்ப்பொருளுரை வெளிவந்துவிட்டதா என்பதை அருள்கனிந்து எனக்குத் தெரிவியுங்கள்.

ஐயா, தாங்கள் பல புகழும் பல வளமும் பெற்று நீண்ட நெடுநாட்கள் வாழ வேண்டும். தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் அருஞ்செயல்கள் பல செய்யவேண்டும். தமிழ் இனம் தற்பொழுது சாதிகளால் உடைந்து கிடக்கிறது. இவ்வினம் சங்க காலத்திலும் அதற்குப் பின் சோழ, பாண்டிய பேரரசுகளின் காலத்திலும் கண்டிராத அளவிற்கு உயர்ந்த நிலையை இனி வருங்காலத்தில் அடையும் என்று பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் தமது நூலில் கூறியுள்ளவாறு அந்நிலை அடைய அப் பாதைக்குத் தங்களால்தான் வழிகாட்ட முடியும். தகைசான்ற புலவர் பெருந்தகையே! தாங்கள் பலநலமும் வளமும் பெற்று வாழ வாழ்த்தி வணங்குகிறேன். தங்கள் உண்மையுள்ள,

— வே. பாண்டியரசன், தூத்துக்குடி-1

O : 1548: பேரன்புப் பெருந்தகை மேதகு பாவலரேறு ஐயா அவர்கட்கு என் பணிவான வணக்கங்கள் பல.

ஐயாவின் திருப்பூர் (தமிழ்ச்சாதிகள் ஒற்றுமை)மாநாட்டுப் பேச்சு ஒரு பெரிய தமிழக வரலாறு. உண்மை வரலாற்றை அவர்களுக்குப் புரியவைத்துவிட்டீர்கள். மக்களுக்கு ஒரு மேலான விளக்கம் கிட்டியது. அதற்கு என் தலையாய வணக்கங்கள், பாராட்டுதல்கள். போற்றுதல்கள் தங்களின் கரவிலாத் தமிழ்ப் பணிக்கு என் தலைதாழ்ந்த வணக்கங்கள்?

— புலவர். தி. மு. அரசமாணிக்கம், ஈரோடு-11.

O : 1549: பேரன்பின் தமிழ்நலஞ் சான்ற ஐயா, எம் தலைதாழ்ந்த வணக்கம்! நலமே. தங்களின் நலஞ்சிறக்கப் பேரருளைப் பெரிதும் வழுத்துகின்றேன்.

ஐயா, 'தமிழ்நிலம்' வந்து 'தென்மொழி' வந்து சேராமையால் மனங் கவன்று கொண்டிருந்த ஞான்று, 'தென்மொழி' கதிரவனைக் கண்டு மட்டிலா மகிழ்வடைந்தேன். எனினும் என்ன! ஒவ்வொரு பக்கமும் படிக்கும் ஞான்று கண்ணீர் கழன்று கொண்டேயுளது. எதைச் சொல்ல? அட்டைப் பாடலில் உள்ளத்துணர்வுகளையெல்லாம் கொட்டி வரைந்துள்ளீர்கள். இத் தமிழினம் இதனையெல்லாம் உணருமாவென்பது தெரியவில்லை. ஐயா, ஒவ்வொரு வரியும் ஆழ்ந்தகன்று எடுத்த அரிய வயிர முத்து! உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூறு ஒளி வீச்சுகள்! தமிழினத்திற்கு, அதன் எதிர்காலத்திற்கு வழிகாட்டும் தக தகத் தங்கக் கட்டிகள்!

சிறையினின்று 'தடா' அன்பர்கள் எழுதிய மடல்கள் ஒவ்வொன்றும் தங்களின் மீமிசை நேயத்தை வெளிப்படுத்துவது

லாக உள்ளன. அங்குள்ள அன்பர்கள் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு விட்டீர்களே. ஐயா; ஐயா அருள்மணி நேரில் கண்டெழுதிய தங்களின் திருக்குறள் விளக்கவுரை'க்கான மடல் உண்மை, உண்மையே! அஃது இவ்வூழி உள்ளவரை நிலைத்து நிற்கும் என்பது மெய், மெய்யே! நான பெரிதும் வெட்கமுறுகின்றேன். ஏதோ நான் தனியாய் நிற்பது போன்று. மொழி இன நாட்டிற்கு ஏதும் செய்ய வக்கற்றவனாக உள்ளேனே என ஐயுறுகின்றேன். சென்னைக்கும் வந்து போக முடியவில்லை. வர இருக்கின்ற நாளும் தள்ளிப் போகின்றது.

ஐயா. அண்மையில் 20, 21.11.93 ஆகிய நாள்களில் குழித்தலையில் நடைபெற்ற 'கா.சு.'-(பிள்ளை) இலக்கிய விழாவிற்குச் சென்றிருந்தேன். அன்பர்கள் பலர் தென்மொழியின் அட்டைப் பாடல்களை ஒவ்வொருவரிடமும் மனப்பாடமாக சொல்லிப் பிறரையும் உணர்வூட்டி, வியக்க வைத்தனர். அத்துணை உண்மைத் தமிழுள்ளங்கள் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றனர்.

ஐயா. 28-11-93 அன்று திருப்பூரில் நடைபெறவிருக்கும் தமிழ்ச் சாதி மாநாட்டில் கலந்து கொள்ள இருப்பதாக திரு. இளமாறன் முன்பு (27-10-93) கொடுத்த ஒரு அறிக்கை வழி கண்ணுற்றேன். நானும் செல்ல விரும்புகின்றேன். ஆங்கு நம் வெளியீடுகளைக் கொண்டுவந்தால் நன்றாயிருக்கும் எனக் கருதுகின்றேன். அருளி ஐயாவின் வெளியீடான 'தென்மொழித் தொடக்கநிலைத் தொண்டு வரலாறு' கிடைக்கப் பெரிதும் நன்றே.

— குழந்தை. ஈகவரசன், திருச்சி-16.

O : 1550: பெருவணக்கத்திற்குரிய ஐயா, ஈழத்தமிழகம் புதுமனை புகுவிழா நிகழ்ச்சியை நெடுங்காலப் பணி நோக்கித் தொடக்கியிருப்பதாக நம்புகிறேன். சரியான திசையில் இயங்கவும் அத் தலைநாளில் சூள்கொண்டதாக அந்நாள் அமைந்தது. தாங்களும் நெடுமாறன் ஐயாவும் காசி ஆனந்தன் அவர்களும் கலந்து கொண்டதில் ஓர் உண்மையான உணர்வான இணைப்பிருப்பதைப் பலரும் ஒப்புவர். தங்கள் வழியில் என்னை இயக்குமாறு மீண்டும் வேண்டுவேன். ஈழத் தமிழகம் சார்பில் அடுத்த கிழமை தென்மொழிக்கு ஓர் அன்பளிப்பு அனுப்புவேன். பிற பிறகு எழுதுவேன்.

—என்றும் அன்பு மாணவன்
கு. இராசேந்திரன், சென்னை-64.

O : 1551: போற்றுதலுக்குரிய பாவலரேறு அவர்களுக்கு வணக்கம்! தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்கள் தொடர்ந்து எனக்கு வந்துகொண்டிருக்கின்றன. தங்களை நேரிற் கண்டு அளவளாவ வாய்ப்பில்லை, என்றாலும் இதழ்களின் வழித் தங்களை முழுமையாக அகக்கண்ணால் கண்டு பேருவகையும் பெருமிதமும் கொள்கின்றேன். தாங்கள் 'தடா'வில் தளைப்பட்டதறிந்து நெஞ்சு நொந்துபோனேன். அன்று ஒரு பணியிடைப் பயிற்சிக்காகச் சென்னை வந்திறங்கியிருந்தேன். பயிற்சிக் காலத்தில் (10 நாட்கள்) ஒருநாள் தங்களைக் காண பேரவாக் கொண்டிருந்த எனக்குப் பேரிடியாக அச் செய்தி வந்தது. அது முதற்கொண்டு

தங்களைப் பற்றிய எண்ணங்கள், ஏக்கங்கள் என் நெஞ்சிற்குள் சுழன்று கொண்டிருந்தாலும், இக்கால் தமிழர்களைப் பெரிதும் ஆட்கொண்டுள்ள நெடுநீர், மறவி, மடி துயில், போன்றவற்றால் தங்களோடு தொடர்பு கொள்ள இயலவில்லை.

அண்மையில் (அக்'நவம்.93) தென்மொழி இதழின் முகப்புப் பாடல் என் நெஞ்சை நெகிழச் செய்துவிட்டது. ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர் இன்றும் ஒருவர் நம்மிடையே வாழ்கின்றார் என்ற நிறைவும் ஏற்பட்டது.

'புகழ் எனக்குப் பொருட்டில்லை... நோக்கமில்லை! .. எனத் தொடங்கி,

'இழிவெனினும், அழிவெனினும் அனைத்தும் ஒன்றே!' என்று தாங்கள் கூறியிருப்பது, ஒரு தமிழ் பாமுனிவரின் அப்பழுக்கற்ற, தெளிந்த, உறுதியான உள்ளத்தை எங்களுக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

தமிழால் வாழ்ந்துகொண்டிருக்கும் நான் தமிழுக்காக வாழ்ந்து கொண்டு, இல்லை! இல்லை! 'வதைப்பட்டுக் கொண்டிருக்கும் தங்கள் முன் நாணிக் குறுகி ஒடுங்கி இறுதியில் ஒன்றுக்கும் உதவாத தூசுபோல் இல்லாமல் போவது போன்ற உணர்வு என்னுள் ஏற்படுகின்றது.

'என்னைத்தான்' வைத்தாலும் வைதிருமின் வாழ்த்து எனக் கொண்டிடுவேன்' என்ற வள்ளலாரின் பற்றற்ற தூய, தொண்டுள்ளம் கொண்ட தாங்கள் எனக்காக என் மொழிக்காக, இனத்திற்காகப் பல்லாண்டு நெஞ்சுரத்தோடு வாழ 'அறமுதல்' துணைநிற்கும் என்பதில் ஐயமில்லை.

இத்துடன் உருபா 100/-க்கான வரைவோலையினை இணைத்துள்ளேன். தாங்கள் அளிக்கின்ற இதழ்களுக்காக என் பெயரில் நிலுவை இருந்தால் அதில் வரவு வைத்து கொள்ளவும். தங்களின் தூய தமிழ்ப்பணிக்கு என்றுமே இச் சிறியேன் துணைநிற்பேன். எங்கள் பகுதிக்குத் தாங்கள் வர நேரிடின் எனக்கு ஒரு வரியில் எழுதித் தெரிவிக்க வேண்டுகிறேன். நான் சென்னை வந்தால் தங்களைத் தவறாமல் காண்பேன். அன்பன்,

— பேரா. தா. மணி. க. மு; இலக். மு; ஆ. ப.,
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி.

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

(பொன்னம்மாளும் கணவனும் அவை மன்றத்துக்குள் நுழைகின்றனர்)

மனை-பொன்: (கணவனிடம் வியந்து) அதோ, பேசுகிறானே அவனேதான் அக் கொடியவன்.

கண: அவன்தான் அவை முதல்வன்! பொய்யை மெய் போல் பேசுகிறவனைத்தான் மக்கள் நம்புகிறார்கள்; கண் குருடர்களாய் மக்கள் இருக்கும் வரை இந்த விலங்குகள், விலாங்குகளைப் போலத் தப்பித்துக் கொள்ளும்! வா போகலாம்.

போய் விடுகிறார்கள்; திரை; (முடிவுற்றது(

பெருஞ்சித்திரனார் மேல் பீடுறு பாடல்கள்!

விடுதலைக்கு உறுதி தரும்!

— பரமனந்தல் தமிழ்ப்பித்தன்.

நாவலந் தீவாண்ட தமிழன்
தன்னினம் வந்தவோர் தூயன்
பாவலரேறுவின் தோற்றம்
பைந்தமிழ் முனியெனச் சாற்றும்!
ஏவல் புரிந்திடும் சொற்கள்;
எழுதினால் அவைவைரக் கற்கள்!
தூவலில் வெளிவரும் குருதி;
தருமே நம் விடுதலைக்(கு) உறுதி!

நிறைமொழி போல் நின்றார் நிலைத்து.

— க. அரசு, வெங்காலூர்.

வாழ்பெருஞ் சித்திரனார் வற்றாத் தனித்தமிழ்க்கே
ஊழ்வினை வந்தே உயர்த்தினும்— தாழ்த்தினும்
வண்ணவண்ணப் பாக்களால் வாடாத மாலையிட்டு
எண்ணம்வாழ் பாவலரேறு

ஏறுபோல் தென்மொழி யேடுதனில் தோன்றிடுவார்
வீறுடன்தாய் நாட்டின் விலங்கொடிக்கச்—சீறிடுவார்
ஆரியர்செய் கொல்குறும்பை அப்படியே புட்டுவைத்துப்
பாரிலுரைப் பார்மெய் பதைத்து

பதைத்திடுவார் செந்தமிழர் பாழ்பட்டு வாழ
விதைத்திடுவார் நல்லுரிமை வேட்கை—உதைத்திடுவார்
கூடப் பிறந்தே குடிகெடுக்கும் வீடணக்
கேடரை யென்றுங் கிளர்ந்து

கிளர்ந்தாரே இந்தியிங்கே வந்துறவே நெஞ்சில்
வளர்ந்தாரே செந்தமிழை வாழ்த்திப்—பிளந்தாரே
பொய்யா மொழிக்குற்ற பொய்யுரையைச் செந்தமிழர்
மெய்யுரையால் என்றும் மிதித்து

மிதிப்பாரே பார்ப்பன மேலாண்மைப் போக்கை
கொதிப்பாரே கேள்பகையின் கூனல்—மதிக்கே
பதிப்பாரே தன்சுவடு பாட்டில் உரையில்
புதிது புதிதாய்ப் புனைந்து

புனைவாரே செந்தமிழர் பொங்கி யெழவே
முனைவாரே தன்னந் தனியாய்—நினைத்தபடி

தாய்நாட்டின் நல்லுரிமை தான்பெறவே வன்'தடா'
வாய்க்குமென் றுலும் வலிந்து

வலியவர்முன் கைகட்டி வாய்பொத்தி வாழ்வில்
நலமுறவே எந்நாளும் நாடார்—குலமென்னுங்
கூற்றுவனைத் தேடார் கொடுந்தமிழைக் கூடார்நல்
ஏற்றமுறப் பாடார் இழிவு

இழிவைச் சுமக்க இசையார் தமிழர்
பழியைச் சுமக்கப் பதைப்பார்—ஒழிப்பார்
தமிழ்நிலங் கண்டே தமிழ்ச்சிட்டுங் கண்டே
தமிழ்மருந்துந் தந்தே தனித்து.

தனித்தமிழ் போலே தனித்தே சிறந்தார்
தனித்தமிழ்த் தாங்கிடத் தாயாய்க்—கனிந்தார்
மறைமலை பாவாணர் வாய்ச்சொல் புகழ்ந்தார்
நிறைமொழிபோல் நின்றுர் நிலைத்து

நிலைப்பார் நிலைப்பார் நெடுநாள் உலகில்
நிலைப்பார் அவர்சொல் நிலைத்து—மூளைத்துக்
கிளைத்துச் செழித்துக் கொடுக்கும் வரையில்
தளையும் தடாவும் தகர்த்து.

தனித்தமிழ்க் காவலர் பெருஞ்சித்திரனுர்!

பாவலர். சிங்காரவேலன், திருச்சி-2

வளம்பெருக்கி நெஞ்சுயர்த்தி தமிழ்வளர்க்கும்
வரலாற்றுப் பேரறிஞர் பெருஞ்சித் திரனுர்!
குலம்பெருக்கி இனம்உயர்த்தி இருளைப் போக்கிக்
குறுமதியை வேரறுக்கும் தென்மொழி ஆசான்!
தளராமல் தனித்தமிழை வளரச் செய்தே
தன்மானம் தமிழ்மானம் காக்கும் வல்லோய்!
இளையோரை பாநெருப்பால் எழும்பச் செய்தாய்
இதற்கெனவே 'தடா'ச்சட்டம்! சிறையில் வைத்தார்!

விழித்தலையே விரும்பாது வீழ்ந்தே போன
விடுதலையே வேண்டாத குமுகா யத்தைக்
குழிதோண்டிப் புதைக்கின்ற இற்றை நாளில்
குன்றுது தன்னுரிமை முழக்கம் செய்தார்!
அழித்தலையே தொழிலாகப் புரியும் மூர்க்கர்
அனல்பாவார் தமிழ்ப்புலியைக் கூண்டில் போட்டார்!
செழித்தலையே விரும்புகின்ற அன்னுர்
செந்தமிழே சிறைஉடைக்கும்! வெற்றி பூக்கும்!

துரைமா என்னும் அரிமாப் பத்து!

— பறம்பை அறிவன்.

மூச்சும்பேச் சும்தமிழ் ஆன துரைமாவின்
ஏச்சும் தமிழே; எழுத்தும் அமிழ்தேயாம்;
ஓச்சும் உயர்கொள்கை வீச்சில் விழுங்காண்க
நச்சா ரியம்மேல் நலிந்து.

தளைப்பட்ட செந்தமிழை வீடுசெய்த ஆற்றல்
கலைப்படைப்பில் காண்போமே; என்றும் கணிப்பில்
திளைப்பில் தமிழினமே காணும் அரிமா
இளைப்பிலாப் பாவலர் ஏறு!

ஆயிரம் நாளில் இவன்தமிழைக் கொண்டுசெல்ல
ஆயிரம் செய்க மொழிபல கற்றவர்கள்
இல்லையேல் செய்த பிழைக்குப் பிறங்கடையர்
சொல்லுவர் ஆயிரமாம் தீது!

நோயிவனுக் கில்லை; திரைமூப்பிங் கில்லையே
ஆயும் தமிழாலே; ஆகவே செந்தமிழீர்
போயிவன் பொன்துகள் போற்றிப் புரப்பீர்கள்!
ஏயும் தமிழ்விளைவை ஏற்று!

மகன்செல்லும் பாதை தவறெனிலும் சுட்டுவான்
மற்றவர்போல் தூக்கித் தலைவையான் பிழையை!
உற்றகருத் தாய்ந்தே உழைப்பான் மொழிஇனத்திற்
காற்றும் பொதுவுணர்வால் ஆம்!

யார்யார்க்கோ செந்தமிழை வாழ்த்துரைக்கச் சொல்லி
வலிவிழந்தார்; நந்தமிழ்க்கும் மீளாப் பழிசெய்தார்;
சீரெல்லாம் செம்மாந்த எம்மினம் எய்திட
வாழ்கின்றான் வாழ்த்துதற்கு வா.

கோடிகள் சேர்த்தவர்முன் கொள்கைக் கொடிபிடித்து
ஓடியாடி நல்லினம் மேன்மைக்கு நாடிய
சித்திரனார் அன்றோ பெருஞ்சித் திரனாராம்
சிறந்தோங்கி மீட்பார் தமிழ்

வேடிக்கைப் பேச்சும் பகடி உரையுமே
வாடிக்கை யாக்கித் தமிழ்வணிகம் செய்வார்முன்
நாடி பிடித்துத் தமிழின நோயினை
நீளாமற் செய்வார் நிறைந்து

சிறைவைத்து விட்டால் சிதையும் உரமெனச்
சிந்தித்த ஆரியப் பொய்களெல்லாம் தூளாகப்

போராளி யானுன் புதுநெறி செய்தானே
சீராளன் எங்கள் துரை.

வீழும் மழைத்துளி; வெல்லும் தமிழ்ப்புலி
மூளும் உரிமைக் கனலெம் துரைமா
அரிமாப் புலவரேறு ஆரியம் தூறையாம்
வீறுகொள் பேரவனைப் பேசு. O

மாறுக் கொள்கைப் பேரறிவாளர்!

த. அன்பழகன், மஞ்சள்நீர்க்காயல்.

மாறுக் கொள்கைப் பேரறி வாளர்
'ஐயா' அவர்களுக் கன்பின் வணக்கம்;
தமிழ்ப்படைத் தலைவர் 'பிரபா கரனை'
வெளிப்படை யாக ஆத ரித்ததால்—
தமிழின விடுதலை முதன்மை என்று
துணிவொடு சாற்றி நெஞ்சு நிமிர்த்ததால்—
'தடா'லென விழும் 'தமிழினத் தலைவர்(?!)
போலல் லாமல் கொள்கைபோற் றியதால்—
'தடா'வென் சட்டத் தளையால் கட்டிச்
சிறையுளே போட்டார்; உடல்நலம் சிதைத்தார்;
கேடு கெட்டார், கெடுதல் நினைப்பார்;
ஆயினும் அவர்தாம் அடைந்த தென்ன?
முகில்ம றைப்பதால் கதிரவன் மறையுமோ?
நரித டுப்பதால் அரிமா நிற்குமோ?
வெளிப்படாப் பொத்தகம் வெளியிட முனைந்து
பொய்ப்பொருள் விலக்கும் புதுமைத் திருக்குறள்
மெய்ப்பொருள் விளக்கம் மேலும் எழுதிக்
கைப் பொருள் மிகுந்தே சிறைமீண்டு வந்தீர்,
மீண்டும் 'தென்மொழி' விளக்கு
யாண்டும் தமிழ்ஒளி வீசிப் பரப்பவே!

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்.

ஒரு மறுப்பு மடல்!

(எழுதியவர் தமிழறிவை அவ்வாறே உணர்த்த இம்மடலின்கண் உள்ள பிழைகளும் பிறசொற்களும் களையப் பெறவில்லை.)

தமிழுணர்வு சான்றீர்; வணக்கம்.

தங்களின் கடந்த மாதத் 'தென்மொழி' இதழில் பாரதிதாசன் பல்கலைக் கழகத் தமிழியல் துறை குறித்தும், அதன் துறைத் தலைவர் குறித்தும் ஒரு சில கருத்துக்களை வெளியிட்டிருந்தீர்கள். நீங்கள் அதில் குறிப்பிட்டிருப்பதுபோல் எந்த ஒரு மொழியியல் கருத்தரங்கமும் இதுவரை அத் துறையின்கீழ் நிகழ்த்தப்பெறவில்லை. கடந்த சில ஆண்டுகளாக இத்துறையின்கண் ஆய்வு நிகழ்த்தி வருபவன் எனும் முறையில் இதனைத் தங்கட்கு உறுதியோடு கூறிக் கொள்வேன்.

உங்களின் தமிழுணர்வுப் பிரசித்தம் போலவே, அந்தத் துறை இக்காலத் தமிழிலக்கிய ஆய்வுகளில் தன்னை ஈடுபடுத்தி வருவதும் ஊர்ப் பிரசித்தம். எனவே நீங்கள் கூறியிருக்கும் 'உரையாடல் பகுதிகள்' நிசத்தில் நடந்தேறி இருப்பதற்கான சாத்தியக் கூறுகளே இல்லை.

திரு. அருளியின் தமிழ்ப்பணி நீங்கள் கூறியவை வற்றிற்கும் அப்பாற்பட்டதுதான். ஆனால் அதற்காக, இதில் ஒரு பாவமும் அறியாத ஒரு நிறுவனத்தை—தனி நபரை—வம்புக்கிழுத்திருப்பது உங்களின் பொறுப்புணர்ச்சியைக் காட்டவில்லை. இதுவரை தமிழினத்திற்கு மாற்றுக் கருத்துக்கள் உள்ளவர்கள் மீது பாய்ந்துவந்த உங்களின் சுடுசொற்கள் இப்போது அண்மைக்காலமாகத் தமிழ் நல விரும்பிகள் மீதே பாய்ந்து வருவது துரதிருஷ்டவசமானது. எனது கூற்றில் உள்ள நியாயங்களை ஏற்று இதைப் பிரசுரிப்பீர்கள் என நம்புகிறேன்.

நன்றி/

தங்கள்

திருச்சி: 24
5—12—93

வ. நாராயண நம்பி,
ஆய்வாளர் தமிழியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி-24.

(ஆசிரியர் குறிப்பு: இம் மடல் வெளியிடப் பெற்றதாலேயே இதன் கருத்துகள் ஏற்கப் பெற்றவையோ ஞாயமானவையோ ஆகா. உண்மையல்லாத எதனையும் நம் கருத்துக்கு எடுத்துக் கொள்வதில்லை. இம் மடலை எழுதுவார் விரும்பின், தென்மொழியின் குற்றச் சாட்டைப் பெயரீடம் சுட்டி விளக்க அணியமாயுள்ளோம்.)

ஆசிரியர் வீடு மாற்றம்.

பொறுப்பாசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள் இல்லம், மயிலார்ப்பூர், 12. துவாரகைக் குடியிருப்பிலிருந்து, சென்னை-17, தியாகராயநகர், தென்மேற்குப் போக் சாலை, எண் 27-க்கு மாற்றப் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்பர்கள் இனி ஆசிரியர் இல்லத்திற்கு வருவதாயின் புதிய முகவரிக்கு வரும்படி வேட்டுக் கொள்கிறோம். —அமைச்சர்.

நூல்கள் வரப்பெற்றோம்.

(இங்கு நூல் நிறைக்கு வ. பெற்ற நூல்கள் பற்றிய சில விளக்கங்களை வெளியிட்டுள்ளோம். இவற்றுள் சிறப்பான நூல்கள் பின்னர் நூல் நிறைப் பகுதியில் திறனாய்வு செய்யப் பெறும்).

1. திருக்குறள் முத்து (இரண்டாம் பாகம்)
ஆசிரியர்: குறளன்பன் ஆ. வே. இராமசாமி, இலக் இ.(கல்.இ)

திருக்குறள் பற்றிய 20 கட்டுரைகள் அடங்கிய நூல் இது. இவ் வகையில் இஃது இரண்டாம் பாகம். திருக்குறளில் வரும் உறுப்புச் சொற்களும் உணர்வுச் சொற்களும் தாங்கிய குறட்பாக்களை எடுத்து அவற்றை அழகும், அறிவும் சான்ற வகையில் விளக்கியுள்ளதைப் படித்து மகிழலாம்.

விலை: உருவா. 2.25. பக்கம்: 42

வெளியீடு: குறளன்பன். ஆ. வே. இராமசாமி.
'தமிழகம்' வைரிசெட்டிப்பாளையம்,
திருச்சி மாவட்டம். 621012.

2) தேசிய இனச் சிக்கலும்
அடக்குமுறைச் சட்டங்களும்.
ஆசிரியர்: பேரா. தி. இராமதாசு, க. மு.(ஆங்); க. மு. (ஆட்சி) க. மு. (அரசியல்), ச. இ.
தமிழ்இன விடுதலைக் கழகம்.

இந்தியத் தேசிய இனங்களின் உரிமைகளை விளக்கி, அவற்றின் விடுதலையுணர்வை வளர்த்தெடுக்கவும், அவ் வுணர்வெழுச்சிகளை அடக்கியொடுக்கிட இந்திய அரசு உருவாக்கியுள்ள அடக்குமுறைக் கறுப்புச் சட்டங்களைத் திறனாய்வு செய்தும் எழுதப்பெற்ற சிறிய நூலானாலும் சிறந்த நூல். தேசியஇன உணர்வுள்ள அனைவர் கைகளிலும் திகழ வேண்டியது இது.

விலை: உருவா. 2·50. பக்கம்: 16.

கிடைக்குமிடம்: கி. இராசமாணிக்கம்
தமிழ் இன விடுதலைக் கழகம்,
137. மகாதானத் தெரு, மயிலாடுதுறை: 609001.

3) கீதை ஓட்டும் பாதை. (திறனாய்வு நூல்)
ஆசிரியர்: பாவலர். நாரா. நாச்சியப்பன்,

பகவத் 'கீதை'யைப் பற்றிய ஒருவகைத் திறனாய்வு நூல் என்று இதைச் சொல்லலாம். இனி, இதைத் திறனாய்வு என்று சொல்வதைவிட, கீதையில் உள்ள கசடுகளையும், கரவுகளையும், ஆரியச் சூழ்ச்சிகளையும் வெளிப்படுத்துகின்ற நூலாகும் இது. இதுபற்றி நூலாசிரியர் தம் முன்னுரையில், 'ஒரு சிலர் கீதை நல்ல நூல், நீதி நூல், ஞான நூல், என்று சிலவற்றை அறிமுகப்-

படுத்துவார்கள்; ஆனால் நாம் கற்கும்போதுதான் அவை கசடு நிறைந்தவை என்பது புலப்படும்' என்று குறிப்பிடுகிறார். இக் கருத்தே சரியானது, உண்மையானது என்பது இந்நூலைப் படித்து அறிந்து கொள்ளலாம். கட்டாயம் படிக்க வேண்டிய நூல்களுள் இதுவும் ஒன்று.

விலை: உரு. 20. பக்கம்: 152+8

கிடைக்குமிடம்: அன்னை நாகம்மை பதிப்பகம்
2/141- இரண்டாவது தெரு, கந்தசாமிநகர்,
பாலவாக்கம், சென்னை-41.

4) சுதந்திரம் பேசுகிறது. (உரைப்பாக்கள்)
ஆசிரியர்: உலகர்ச்சிக்கவிஞர். சிங்காரவேலன்

இந்தியா உரிமை பெற்ற பிறகு நாட்டிலுள்ள சீர்கேடுகள் வெளிச்சம் போட்டுக் காட்டப் பெறுகின்றன. இந் நூலில்.

விலை: உருவா. 5 பக்கம்: 32.

கிடைக்குமிடம்: கவிஞர் சிங்காரவேலன்,
2. காவேரி சாலை
தேவதானம், திருச்சி-2.

5) காஷ்மீர் மீதான பாரதத்தின் யுத்தம்.
ஆசிரியர்: கவுதம் நாவ்லகா
மொழியாக்கம்: வேலுச்சாமி.

காசுமீர் சிக்கலை விளக்கிக் கூறும் வரலாற்று நூல்; சிறப்பாக எழுதப் பெற்றுள்ளது. மொழிபெயர்ப்பும் அப்படியே.

விலை: உரு. 10. பக்கம்: 76.

கிடைக்குமிடம்: சமூகநீதி பதிப்பகம்,
54, கண்ணகி நகர்,
பெருமாநல்லூர் சாலை, திருப்பூர்-638602.

6) எரிமலை (பாடல் தொகுப்பு)
ஆசிரியர்: கவிஞர் புதுமைக்கோமான்.

ஆசிரியர் எழுதிய எழுபத்திரண்டு பாடல்கள் கொண்ட நூல் இது. அவை குமுறல்கள், சான்றோர், மங்கை, நாடு, இறைவன், தத்துவம், சிறார் என்னும் ஏழு தலைப்புகளில் பகுக்கப் பெற்றுள்ளன. பாடல்கள் எளிமையும் இனிமையும் சான்றவை. பாவன்பர்கள் படித்துச் சுவைக்கத் தக்கவை.

விலை: உரு: 25. பக்கம்: 168.

கிடைக்குமிடம்: புதுமைப் பதிப்பகம்.
343, ஆஸ்டின் டவுன்,
3-ஆவது சதுக்கம், பெங்களூர்-560047.

7) சுற்றுலாத் தொண்டில் நாற்பதாண்டுகள்.
(உரையும் பாடலும்)
ஆசிரியர்: அ.ம.வேணுகோபாலன்

இஃதொரு சுற்றுலா நூல். ஆசிரியர் 1946 இல், இந்திய நாட்டின் இயற்கை எழில் வளங்களைக் கண்டு மகிழ்ந்திட அன்பர்கள், தொழிலாளர்கள் அடங்கிய ஒரு குழுவுடன் தம் சுற்றுலாப் பயணத்தைத் தொடங்கி, தெற்கே, கன்னியாகுமரி முதல் வடக்கே இமயமலைவரை இந்தியாவில் அத்தனை மாநிலங்களிலும் உள்ள மக்களையும், காண வேண்டிய திருவிடங்களையும் கண்டும் கேட்டும் வந்த செய்திகளை இந் நூல்வழி உரையாகவும் பாடலாகவும் சுவை படவும் சுருக்கமாகவும் எழுதியுள்ளார்: நூல் சலிப்பின்றிப் படித்து மகிழும் வண்ணம் எழுதப் பெற்றுள்ளது. நாடு காண விரும்புவார்க்கு இந்நூல் மகிழ்வும் பயனும் தரும் என்பதில் ஐயமில்லை.

விலை: உருவா: 6 பக்கம்: 76.

கிடைக்குமிடம்: பாவலர் அ. ம. வேணுகோபாலன்,
2. 80 அடி சாலை
பிரகாசு நகர், பெங்களூர்-21.

8) இந்தி எதிர்ப்பு வரலாறு.
ஆசிரியர்: த. அழகரசன் க.மு;கல்.இ.

இந்தியை எதிர்த்து 1938, 1948, 1965 ஆகிய காலகட்டங்களில் தமிழகத்தின் நடந்த போராட்டங்களைப் பற்றிய வரலாற்று விளக்க நூல் இது. இப் போராட்டங்களில் ஈடுபட்ட தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, முதலிய தலைவர்கள் பற்றியும் சுருக்கமாக இதில் கூறப் பெற்றுள்ளது. இனிய செய்திகள் பல இதில் உள.

விலை: உருவா 4. பக்கம்: 51.

கிடைக்குமிடம்: வளனரசு பதிப்பகம்:
9. வெங்கட்டராமன் தெரு,
தேனாம்பேட்டை, சென்னை-18

9) பெங்களூர் எங்களூர். (வரலாறு)
ஆசிரியர்: வெற்றிக்கனல் (குறு)

பெங்களூர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தது என்று கூறப் பெற்றாலும், அவ்வூரை 1537-இல் உருவாக்கியவன் தமிழன்; அவன் பெயர் கெம்பே கவுடா என்பது. அவன் ஒரு வேளாளன்; கவண்டர் என்னும் சொல் கன்னடத்தில் கவுடா என்று திரியும்; தமிழர்கள் பாதிக்கு மேல் வாழும் பெங்களூரின் வரலாறு மிகவும் தெளிவாக இதில் தரப்பெற்றுள்ளது;

விலை: உருவா: 5. பக்கம்: 40.

வெளியீடு: பாட்டாளிப் பதிப்பகம்.
63. நாட்டுமுத்து நாயக்கன் தெரு,
வன்னியத் தேனாம்பேட்டை,
சென்னை-600018.

10) 'திராவிட' தினமணியின் பார்ப்பனியம்!
தொகுப்பாசிரியர்: எசு.வி. இராசதுரை, வ. கீதா.

தமிழினத்தைப் பற்றித் 'தினமணி' நாளிதழில் திரு. இந்திரா பார்த்தசாரதியின் கட்டுரைகளும் அவற்றிற்குத் தொகுப்பாசிரிகள் எழுதிய விடைகளும் தொகுத்தளிக்கப் பெற்ற நூலிது.

விலை: உருவா: 16. பக்கம்: 144.

வெளியீடு: கவிதா நிலையம்,
3. பணிபூண்டார் வீதி,
விருத்தாசலம்-606001.

11) செயலை நோக்கிய சிந்தனைக்கான கட்டுரைகள்.
ஆசிரியர்: கருணாமனோகரன், இரணியன்.

இதில் 'ஒடுக்கப்பட்ட தமிழர்களே ஒன்றிணைவீர்' என்னும் கருணா மனோகரன் கட்டுரையும், தமிழ்ப் 'பாட்டாளியரின் உயிர்ப்பு' என்னும் கட்டுரையும் உள்ளன.

இதுபோலும் கட்டுரை நூல்கள் பொதுவுடைமைச் சிந்தனைத் தெறிப்புகளாக ஏராளமாக வந்தும் பயன் குறைவாக உள்ளதே எப்படி?

நன்கொடை: உரு: 3. பக்கம்: 16.

வெளியீடு: ஆய்வகம், 30. குமலன் குட்டை,
ஈரோடு-11.

12) தடை கடந்து காவிரியே
தமிழ்நாடு வந்து விடு!
ஆசிரியர்: உணர்ச்சிக் கவிஞர் சிங்காரவேலன்.

இது, காவிரி நீரைத் தமிழகத்திற்குத் தரவேண்டும் என்னும் கருத்தில் எழுதப் பெற்ற பாடல் நூல்.

விலை: உரு: 2. பக்கம்: 20.

வெளியீடு: கவிஞர் சிங்காரவேலன்,
2, காவேரி சாலை,
தேவதானம், திருச்சி: 620002.

இன்னும் இளமையோடும் எழுச்சியோடும் உலக அரங்கில் உலா வருகிறது.

அடுத்து, தாங்கள் செய்யவேண்டியபணி, ஆரிய இந்தியையும், வேற்றின ஆங்கிலத்தையும் தமிழில் கலப்பதைத் தடுக்கும் வகையில், தமிழ்ப் பற்றாளர்களின் கட்டுரையும், பாடல்களும் தங்கள் இதழில் தொடர்ந்து வெளியிடவேண்டும். வணிக முறையில் அதிக பக்கங்கள் ஒதுக்க வாய்ப்பு ஏற்படாது. குறைந்த அளவு 2 பக்கங்களாவது தமிழ்மொழிக்கு, வளர்ச்சியைக் கொடுக்கும் வகையில் இருக்கவேண்டும். ஆக்க முழுமையான முறையில் அனைத்து ஒத்துழைப்பும் நல்குவேன் என்று உறுதி கூறுகிறேன். தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரின் கடமையும் ஆகும். இது.

பாவலரேறு ஐயா அவர்களின் படத்தை முன் அட்டையில் முன்பக்கம், முழுப்பக்கம் வெளியிட்டுச் சிறப்பிக்கும்படி வேண்டுகிறேன். அவரைச் சிறப்பிப்பது தாய்த்தமிழைச் சிறப்பிப்பது ஆகும். நன்றி.

தங்கள்,

— அ. ஆறுமுகம், மாயனூர், திருச்சி மா. வ.

O : 1545: பேரன்புடைய தென்மொழி அமைச்சர் அவர்களுக்கு வணக்கம். அன்பன் தா. அருட்கையன் எழுதுவது. 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' 'தமிழ்நிலம்' இதழ்களுக்குக் கட்டணமாக உரு.100- அனுப்பியுள்ளேன். மேலும் ஐயா அவர்கள் சிறையில் தொடர்ந்து இருப்பதை அறிந்து துயரப்படுகிறேன். தமிழ் இன எழுச்சியை ஆதரித்த ஐயா அவர்களை அரசு சிறைப்படுத்தியது மிகவும் கொடுமை!

'தென்மொழி' இதழ்கள் அனைத்தும் தொடர்ந்து வெளிவர வேண்டிய இதழ்கள்; தமிழ்இன எழுச்சிக்கும், தமிழ் மொழிக்கும், தமிழின மக்களுக்கும் விடியலைப் படைத்திடும் ஆணித்தரமான கருத்துள்ள இதழ்கள். இந்த ஆண்டு சுறவம் (தை) 1-ஆம் பக்கல் முதல் வெளிவந்த அனைத்து இதழ்களும் எனக்குக் கிடைக்கும்படி செய்யுங்கள்.

அன்பன்,

—தா. அருட்கையன், வல்சாது (குசராத்து மாநிலம்).

O : 1546 பேரறிவாளர் அய்யா அவர்கட்கு என் பணிவான வணக்கம்.

தங்களின் திருமுகம் கிடைக்கப் பெற்றேன். தென்மொழி பழைய இதழ்களைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் மடல் ஒன்றினை முன்பே அனுப்பியிருந்தேன். இருந்தபோதிலும், தங்கள் மடலினை இன்று பெற்றுக் கொண்ட நிலையில், உயரிய கடமையெனக் கருதி மீண்டும் இம் மடலினைத் தங்களின் கனிவுமிகு பார்வைக்கு அனுப்புகின்றேன்.

தங்களை நேரிலோ (1990-ஆதிக்க சாதி ஒழிப்பு மாநாடு கடலூர் நிகழ்ச்சியில் பார்த்தது மட்டும்) அல்லது மடல் வாயிலாகவோ (கடந்த ஒரு திங்கள் முன்வரை) தொடர்பு கொண்டதில்லை. ஆனால் தென்மொழி, தமிழ்நிலம், தமிழ்ச்சிட்டு மற்றும் மொழி இன உணர்வைத் தூண்டுகின்ற பல்வேறு பாக்களின் (கனிச்சாறு, ஐயை, பள்ளிப் பறவைகள்) மூலம் தமிழன்னை உருவாகத் தங்களைச் சந்திக்கும் வாய்ப்பினை அன்றாடம் பெற்று வருகின்றேன். நெல்லிக்குப்பம் தமிழினியர் நூலகம் மற்றும் அரசினர் தொழில் பயிற்சி நிலையப் பயிற்றுனர், கடலூர். கா. இராசகோபாலன் போன்ற தமிழ் ஆய்வாளர்களின் மூலம், தங்களின் நூல்களைப் பெற்றுத் தனித்தமிழ் அறிவை வளர்த்துக் கொள்வதிலும் பரப்புவதிலும் ஈடுபட்டு வருகின்றேன்.

தங்களைத் 'தடா'ச் சட்டத்தில் தளைப்படுத்தியபோது மிகவும் உளத்துன்பமும், கொந்தளிப்பும் கொண்டு சில நிகழ்ச்சிகளில்

உரைநிகழ்த்துகின்றபோதெல்லாம், இந்த அரசின் தகாத செயலை வன்மையாகக் கண்டித்து இதுபற்றிக் குரலெழுப்பியும் இருக்கிறேன். ஆனால் தங்களோடு தொடர்பு கொள்ள எண்ணியதில்லை. ஏனெனில் இ'து இம்மண்ணில் பிறந்த ஒவ்வொரு தசைத்துண்டுக்கும் கடமை என்பதனால் எண்ணவில்லை.

உயர்ந்த இனத்தையும் உயிரனைய தமிழையும் வணிகப் பொருளாக்கி அரசியல் பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கும் விலங்காண்டிகள் மலிந்துபோன இம்மண்ணில், உண்மையான உழைப்பையும் பொருள் மேலான வாழ்வின் பெரும்பகுதியையும் இந்த மொழி இனத்திற்காக ஈகம் செய்து வருகின்ற தங்களின் நெறிமாறாத செயல்பாட்டினை இத் தமிழுலகம் முழுதும் என்று உணருமோ, அன்றுதான் தொல்தமிழ்ப்புகழ் வாழ்வு மீண்டும் முகிழ்க்கும் நாளாக இருக்கும்.

எந்நிலையிலும், எப்படிபட்ட விளைவுகளையும் சந்திக்கின்ற நெஞ்சத் துணிவோடு பகைவர்களை இதழ்களின் மூலம் நேரடி எதிர்தாக்குதல் நடத்துகின்ற தங்களின் தனிப்பாங்கு என்னை வியப்பில் ஆழ்த்துவதுடன் புதிய வேக உணர்வை என் நாடி நரம்புகளில் ஏற்படுத்தி விடுகிறது.

அதன் விளைவுதான் நான் கடலூரில் பாவேந்தர் பாசறை என்ற அமைப்பினைத் தமிழ்ப் பெரியோர்களின் துணையோடு நடத்தி வருகின்றேன். மேலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயிலும் வேளையில் (3-ஆண்டுகள்) நடைபெற்ற பல நிகழ்ச்சிகளிலும், மாணவத் தோழர் மற்றும் பல அறிஞர் பெருமக்கள்முன் உரை நிகழ்த்தும் வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம், எனக்கு தமது இதழ்களின் மூலம் பெற்ற பல செய்திகள் துணை புரிந்தன என்பதை மகிழ்வோடு தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய நிலையிலும் அவ்வாறே.

விரைவில் நம் இதழ்களைத் தொடர்ந்து யான் பெறுவதற்குத் தொகை அனுப்பி இருக்கின்றேன். தங்கள் வாயிலாக என்னுள் ஏற்றுக்கொள்ளப்பட்ட உணர்வுகள் என்றும் அவற்றின் இலக்கை நோக்கிட வழிச்செலவை மேற்கொண்டிருக்கும்.

இம்மடலின் மூலம் என்னைத் தங்களுக்கு அறிமுகம் செய்து கொண்ட மகிழ்ச்சியான வேளையில் தங்கட்கு ஒரு வேண்டுகோள்:

தங்க சுதர்சனம் என்ற எனது பெயர் தூய தமிழில் இல்லை என்பதை என்றைக்கோ உணர்ந்தும் மாற்றம் செய்து கொள்ளக் காலம் தாழ்த்தி வந்துவிட்டேன். எனவே தமிழ்ப் பெரியாராகிய தங்களை நேரில் சந்திக்க வாய்ப்பில்லாத நிலையில் கால்நூற்றாண்டு அகவையைக் கடந்து கொண்டிருக்கும் இளைஞனாகிய எனக்கு அருள்கூர்ந்து தனித்தமிழில் ஒரு பெயரினை விடை மடலில் குறிப்பிட்டு வழங்குவீர்களேயானால் யான் பெற்ற பெரும் பேறாகக் கருதிக் களிப்படைவேன். இதற்குத் தங்களை விடத் தகுதிமிக்கவர்கள் வேறு யாரும் இல்லை என்பதை நான் உணருகின்றேன்.

கால, பட்டறிவால் சிறியவனாகிய நான், மிகப் பெரிய அறிஞரைத் தொடர்பு கொள்ளும் இம் மடலில் ஏதேனும் குறைகள் இருப்பின் பொறுத்தருளும்படி வேண்டுகிறேன். தங்களின் நிறைவான மடலை ஆர்வத்தோடு எதிர்நோக்குகின்றேன். நன்றி!

—அன்புடன், தங்க. சுதர்சனம், கடலூர்-9.

(தொடர்ச்சி உள்ளே 21-ஆம் பக்கம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)